**KALANILAYAM** தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ௵ ஜூலை ௴ 28௳ [No. 29

## பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 561
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - கலிதொடர்காண்டம் 563
3. நம்மாழ்வார் வைபவம் (8-ம் பத்து, 4-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 566
4. எல்லாம் வீணே (ஓர் சிறுநாடகம்) G. S. இரகுராமன் B.A. 567
5. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு B.A., L.T. 569
6. பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா
T. R. இராஜகோபால் 571
7. இயந்திரப் பூதம்
K. நடேச கவுண்டர் 572
8. பொதிகைநிகண்டு
S. வையாபுரிப் பிள்ளை B.A., B.L., 573
9. கம்பராமாயணம் (கரனவதைப் படலம்)
T. N. சேஷாசலம். B.A. B.L. 574
10. சொல்லூடாட்டம் 5. 577
11. வர்த்தமானம் 579

## கலாநிலயம்

### விருப்பமும் கருவியும் 4.

நல்லவை செய்யவேண்டுமென்னும் விருப்பமிருப்பினும், பொல்லாத பன்மையின் வஞ்சனைகளினின்று தப்பின வீரர்களே கருமத்தளவில் அவ்விருப்பத்தைக் கைக்கொள்ள இயலும், என்னுமிவ்வாய்மையை ஐயமற உணர்ந்தாலன்றி உலகமோ ஒருநாளும் உதவியொன்றும் பெற்றபடியாகாது. இதனை மறந்து பின் வருந்துவதெல்லாம் வீண். இதனை மறக்காமையோடு பன்மையின் இன்னுமொரு மாயத்தினின்றும் நம்மைக் காத்துக்கொளல் வேண்டும். அது காவாமையாற்றான் இயக்கங்களெல்லாம் இக்காலத்தில் மயக்கங்களின் மறுபெயர்களாகவே முடிகின்றன.

பொதுஜன இயக்கங்களின் நாட்டம் எதுவெனத் தேர்ந்துரைத்தல் எளிதன்று. "நாம் இன்ன நிலையில் இருக்கின்றோம், ஆகையால் ஒன்றாகக்கூடி இன்ன கிளர்ச்சி செய்யவேண்டும்" என்பது பொதுஜன இயக்கங்களுக்கு ஆதாரமாயிருக்கின்ற வாய்பாடாகி எங்கும் நிற்கின்றது. இந்த மந்திரம் இடையீடின்றி இயம்பப்பெறுமாயின் ஆவேசம் பிறப்பது அருமையாவதில்லை. மகாநாடுகளின் ஊக்கம்மிகுந்த பேராரவாரங்களுக்கெல்லாம் இம் மூலமந்திரமே காரணம். ஏனைய இயக்கங்கள் பலவற்றிற்குத் தாயாகவிருப்பது விடுதலை இயக்கமென்னப்படும் இது. "நாம் நம்முடைய உரிமைகளை இழந்திருக்கின்றோம்; அவைகளை மீண்டும்பெறுவதற்கு நாம் ஒல்லும் வகையெல்லாம் உழைக்கவேண்டும்" என்பன போன்றன அப் பொதுவாய்பாட்டின் வழிவந்த வாசகங்கள். அல்லது, "நீங்கள் உங்களுடைய உரிமைகளை இழந்திருக்கின்றீர்" என்று முன்னிலை இடம்பெறப் பேசினும் இச்செவ்வியில் பேதம்பெரிதில்லை. பன்மையின் சூழ்ச்சியைப் பகுத்துணர்வதற்கு எவ்விடமும் ஏற்றதே. எனின், இதனைச் சிறிதிங்குச் சோதனைக்குள்ளாக்குவோம். எல்லாவற்றையுந் தழுவிக்கொள்ளும் இவ் விடுதலைத் தாயியக்கத்தினுள் பன்மையின் பொய்ம்மையைச் சோதித்தறிந்துகொண்டால் பின் மற்றவைகளின் தன்மையைத் தெரிந்துகொள்வது அரியதாகாது. "நாம், நீங்கள்" என்னும் பன்மையைத் தவிர்த்துநோக்குங்கால் உரிமை என்பதன் ஊக்கத்தில் யாதும் உப்பில்லாத் தன்மை புலப்படும். உரிமை என்பதெல்லாம் பொய்; மற்று அப்பொய்ம்மையை மெய்ம்மைபோல் தோன்றச் செய்வது இப்பன்மை, என்பதை இங்குக் காட்டித்தர நினைக்கின்றோம். இதனிற்கு, உரிமையின் பொய்ம்மையை உரைக்கவேண்டுவது அவசியமாகின்றது. அவ்விடயமாய்ச் சில ஆண்டுகளுக்குமுன் வரைந்திருக்கின்ற தலையங்கம் ஒன்றினை நம் பண்பர்கள் இங்கு நினைவுபடுத்திக்கொள்வது நலம்:—

"உண்மையில், தலையால் நடந்து காலால் நினைக்கின்றவர்கள் அல்லராயின் இக்காலமாந்தர் "உரிமை உரிமை" என்றிப்படி அலைந்து திரிந்து ஆரவாரஞ் செய்யமாட்டார் ...முன்னாட்களில் ஒருதிறத்தார் ஆற்றவேண்டிய கடமைகள் எவையெவையென்ன வற்புறுத்தப் பெற்றனவோ அவையாவும் இந்நாட்களில் மறுதிறத்தார் உரிமையென வாதாடப்பெறுகின்றன. திருக்குறள் நாலடியார் போன்ற நீதிநூல்களிலும் ஆரிய தருமசாத்திரங்களிலும், இன்னார் கடமை யிவையிவையென வகுத்திருக்கக் காண்போமே யல்லாமல், அக்கடமை யார்மாட்டுச் செலுத்தப்படவேண்டுமோ அவ்வவர் அக்கடமையைப் பெற்றுக்கொள்ளும் உரிமை யுடையவர் என்னும் நினைவு பாராட்டப்பெற்றிருக்கக் காணமாட்டோம்.

ஆறிலொன் றறமென வருளி னல்லதோன்
றூறுசெய் துலகினி னுவப்ப தில்லையே

என, பயாபதிவேந்தனைத் தோலாமொழித்தேவர் புகழ்

கின்ற சொற்களின் அருமைக்கு இணை வேறு எங்குளது. அரசன்கடமை குடிகளின்கடமை பெற்றோர்கடமை மக்கள்கடமை புருடன்கடமை மனைவியின்கடமை ஆசிரியன் கடமை மாணவர்கடமை எஜமான்கடமை ஏவலாள்கடமை என்று இருதிறப்படுத்திக் கருதவேண்டிய உறவுகளில் கடமை யென்னும் கருத்தொன்றே முன் நிற்கும். மற்றபடி, பொதுவாக விவகரிக்கவேண்டிய விடயங்களில் மானுடதர்மம் ஜாதிதர்மம், குலதர்மம் என்று அவ்வவ் நிலைகளில் அவரவர் ஆற்றவேண்டிய தர்மம் யாதென நிறுவியுள்ளார். தருமம் கடமை என்பன, பொதுவாகவேனும் குறித்தவொருவருக்கேனும் தான் செய்யவேண்டியன. இதனைச் செய்வதற்குச் சாதாரணமாக ஓரளவு சுயநலத்தைத் தவிர்த்துக்கொள்ளல் இன்றியமையாததென்பது வெளிப்படை. மற்று, தனக்குப் பிறர் கடமையாகச் செலுத்தவேண்டியதை வற்புறுத்திக்கேட்பது உரிமையைக் கொண்டாடுவதாகும். கடமையைச செய்வதைக்காட்டிலும் உரிமைக்கு அங்காந்திருப்பது எளியது. "ஆனால், நீ உன் கடமையைச் செய்யவேண்டுபவனே யன்றிப் பிறர் உனக்குச் செய்யவேண்டிய கடமையைக் கேட்கும் உரிமை உனக்கில்லை," என்ற கொள்கையே முன்னாட்களில் நம் இந்தியர்வாழ்க்கையை நடத்தியதென்பதற்குப்பொய்யாத சான்றுகள் பல நம் இலககியங்களிலும் சரித்திரங்களிலும் உள. நம்மிடையே தற்கால நவநாகரிகப் பிரசாரங்களால் முன்னேற்றம் அடைந்திராத சில மாந்தர் இன்றுங்கூட இக்கொள்கையால் தம் வாழ்நாட்கள் நடத்துவதை ஒரோவழி காணலாம்.

உண்மையிலேயே உரிமையென்ற வொன்று இல்லை. அப்படியிருக்குமாயின் அவனவன் தன் கடமையைச் செய்வதற்கிருக்கின்ற உரிமையல்லால் பிறிதில்லை. ஆம், மற்றவன் தனக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யாது விட்டாலோ! விட்டாலென்? அவன் செய்யவேண்டிய கடமையைச் செய்திலன்; அவ்வளவே. அதனால் அக்கடமையை இறுக்குமோர் உரிமை உனக்கு ஏறபட்டதென்று எண்ணவேண்டா. அதனை இறுக்கக் கூடாதென்னும் கடமையே உன்வரையில் இரட்டிக்கின்றது. ஆதலால் நீ உன் கடமையைச் செய்கின்ற உரிமையும் பிறர் தம் கடமையைச் செய்யாதகாலத்து அதனைக் கேட்காதிருக்கின்ற கடமையும் உனதாம். இவ்விதி கடந்த வாழ்க்கை யெல்லாம் வீணழிவிற்கு வழிப்படுத்த நாம் இக்காலம் நாடோறும் கண்டுவருகின்றோ மன்றோ.

உரிமை யென்பதோ பொய்; மெய்வாழ்க்கை வாழ்ந்த இந்தியர் அறியாதது. ஆதலின் உரிமை என்னும் இப்பொய்யை நாமின்று பிறநாடுகளிலிருந்து கற்று, அதுவே மெய் என்று விவகரிக்கின்றோம். பொய்யைப்பற்றிச் செய்கின்றபிரசங்கங்கள் எல்லாம் துன்பத்தைப் பெருக்குமென்பதற்கேதேனும் ஐயமுண்டோ. உரிமை யென்றொன்றைக் கேட்பவன் தன் கடமையைச் செய்யவே மாட்டான். நாமொருவனுக் கொருபொருளைக் கடன்கொடுத்தால் வாங்கினவன் அதைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்னும் கடமை அவனுக்குண்டு. ஆனால் அவன் திருப்பிக் சொடுத்திலனாயின், வற்புறுத்தி அதை வாங்கிக்கொள்ளு முரிமை நமக்கில்லை. இவ்வாசகத்தினைக் கேட்டமாத்திரத்தில் சிலருக்கு உலகமலைவாகத் தோன்றலாம். இந்த உரிமையுண்டென்றே உலகம் விவகரிக்கின்றது. இந்தவுரிமையை நாட்டுதற்கே இருக்கின்ற தரகரிகளுக்கும் வக்கீல்களுககும் நீதிபதிகளுக்கும், அமீனாக்களுக்கும் சட்டங்களுக்கு புத்தகங்களுக்கும், செலவாகும் காலத்திற்கும் பணத்திற்கும் கணக்கில்லை. எனினும் வழக்கெடுத்து வாழ்ந்தவனை இதுகாறும் எந்த நாட்டிலும் யாராவது கணடதுண்டோ. பார்த்ததுமில்லை, பார்ககப் போவதுமில்லை என்பதை யாவரு மறிவர். ஆனாலும வழக்காடுவதால் வருந் துன்பங்களெல்லாம் சட்டம் சரியாயில்லாததினாலும், வக்கீல்களின் வஞ்சனையினாலும் நீதிபதிகளின் தாமதத்தாலும் சாட்சிகளின் துரோகத்தாலும் இவையனையபிறவற்றாலும் நேர்கின்றனவென்று தம்முடைய நிறைந்த அறியாமையால் மதித்துச் சட்டச் சீர்திருத்தங்களிலும் நீதிபதிகளை நிறுவுவதிலும் வக்கீல்களின் வழிகளைப்பற்றியும் வாதாடத் தலைப்படுகின்றனர். இங்கிலாந்திலும் மற்ற நாடுகளிலும் பல நூற்றாண்டுகளாகப் பல சீர்திருத்தங்கள் செய்துபார்த்தனரே, என்ன பயன் உண்டாயிற்று. முன் சொன்னபடி உரிமையென்பது பொய்யாதலால் அப்பொய்யை நாட்டுவதற்கு முயல்கின்ற முயற்சியால் வருகின்ற கேடு இது. அப்பொய்யை விலக்காமல் அதனை நடத்திவைக்கும் முறைகளையும் மனிதரையும் மாற்றுவதால்மாத்திரம் நன்மையுண்டாமென்பது வம்பே.

உரிமை என்னுங் கருத்து உண்மை அன்றென்பதற்கு முன்னுரைத்த உதாரணம் உதவுவதுடன் வழக்கெடுப்பவர் தம் இயற்கையில் இன்னுமொரு விஷயமுங் காணலாம். பெரும்பான்மை பிறர்மீது கடனிறுக்க வழக்குத் தொடுப்பவர் தாம் கொடுக்கவேண்டிய கடன்களை யெளிதிற் கொடார். இந்த நிலைமையும் இன்றியமையாததே. தன் கடமையை மறப்போர்க்கே உரிமையின் நினைவு உறவுற வந்துழக்கும். மற்றவரை நன்குமதித்து மரியாதையாய் ஒழுகவேண்டுமென்பது ஒவ்வொருவனுக்குங் கடமையாம். இதற்குமாறாக மற்றவரால் நாம் மதிக்கப்படவேண்டுமென்பது நமது உரிமையெனப் பாராட்டப் புகுகின்ற காலத்தில் நாம் மற்றவரை மதிக்காமலிருப்பதுடன் பழிக்கவும் புகுகின்றதைப் பார்க்கின்றோம். இதுவுமன்றி நமக்கு உரிமையென்ற வொன்று உண்டென்றும் அவ்வுரிமையை நாம் வற்புறுத்துவது முறையென்றும் விவகரிக்க நம் மனதைப் பழக்கிக்கொள்வதால் விளைகின்ற தீமைகளின் கொடுமையும் அளவும் எண்ணிறந்தன. நாம வற்புறுத்தியே வாங்கி வாஙகிப் பழகுவதால் நம்மை வற்புறுத்தாதவர்களுக்குச் செலுத்திவைக்க மனமோ வருவதில்லை. அப்படி நேரே நின்று வற்புறுத்தாதவர்களுக்கு நாம்செலுத்தவேண்டிய கடைமையாவது, அவர்கள் கேட்கக் கூடிய உரிமையாவது ஏதுமில்லையென மறுத்து விடுகின்றோம். கடவுளுக்கு நாம் வழங்கவேண்டிய கடமைகள் எவ்வளவோ உள. அவைகளில் அவரது சிருஷ்டியாயமைந்த ஜீவன்களெல்லாம் அவரை அன்போடு ஆதரிக்கவேணடு மென்பது ஒன்று. இதனையேனும், இது போன்ற பிற கடன்களையேனும் கடவுள் எதிர்நின்று நம்மிடத்திலிருந்து இறுக்கின்றாரா? இல்லையே. தனக்கும் அவ்வுரிமை யில்லையென்றே அம் முழுமுதற் கடவுளும் கருதியுள்ளார் போலும். அன்றெனின் அவர் இறுக்க மாட்டாரா? அவ்வாறு இறுக்காததால் நம்மிற் சிலர், 'எம்முரிமை' 'எம்முரிமை' என்றென்று எதிர்வழக்கிட்டுக் கொண்டு கடவுளையும் அவர்பால் நாம் வழங்கவேண்டிய கடமைகளையும் அடியுடன் மறுப்பவர்களாகிவிட்டோம்."

எனின், உரிமை என்பதேபொய்யென்ற உறுதியை உணர்வார்க்கு, அதனை இழப்பதென்பது எங்ஙனம் அமையும் என்னும் வியப்பு எழுவது இயற்கையாமே. இல்லாததொன்றை யாரே இழப்பார்? மற்று இழக்க இயலாததொன்றை இழந்திருப்பதாகப் பாவித்துப் பரிவுடன்பெருக்கும் இவ் விடுதலைஇயக்கங்களின் மனோதத்துவம் என்னவென்பதை ஆழ்ந்து ஆராயுங்கால் இது பன்மையால் விளைந்த பேதைமை என்பது தெளியவராகும். ஏனெனில், "நாம் சில உரிமைகளை இழந்து இந்நிலைக்கு இழிந்திருக்கின்றோம்" என்றுரைக்கும்போது பொதுஜனவிடுதலை இயக்கப் பிரசங்கங்களில் பொருளுரைபோற்றோன்றுமிதனையே ஒவ்வொருவனுந்தனித்தனி யெடுத்து, "நான் இன்ன உரிமையை இழந்து இன்ன நிலைக்கு இழிந்திருக்கின்றேன" என்று ஏதேனும் அர்த்தம் பயக்கும்படி கூறமுடியுமோ பார்ப்போம். வாய்வந்தன வளர்ப்பதாற் பயனில்லை. முதலில் தான் எடுத்த மானுடப்பிறவியால் யாது எய்தவேண்டுகின்றான் என்னும் முடிவைக் கூறவேண்டும். உரிமையை யிழந்திருப்பதால் தான் எய்தற்கியலாதிருப்பன இவை இவையென்று ஒருவன் கூறுவானாயின், அவைகளை எல்லாம் அமைதியுடன் சோதித்துப் பாருங்கள். அவையனைத்தும் தனக்கேனும் பிறர்க்கேனும் தீமையே விளைப்பனவாகவேனும் அல்லது எவருக்கும் எவ்விதப்பயனும்அற்றனவாகவேனும் இருக்கும் என்பது நிச்சயம். உரிமையுடன் தொடர்புபடுத்தினால் இப்படியே முடிவதன்றி வேறுவழியில்லை.

மேலே நாம் இக்கட்டுரையிற் செல்லுமுன் நம் நண்பர்கள், இங்குரைத்தவைகளின் உண்மையைச் சிந்தித்தும், மற்றவர்களையும் தங்கள் மனத்தையுமே வினவிச் சோதித்தும் தேர்ந்துகொள்ள முயல்வார்களென நம்புகின்றோம்.

# தமிழ்ப் பாடம் 29.

## நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[548-வது பக்கத் தொடர்ச்சி]

கீழ்வரும் மூன்று செய்யுள்கள், நீராடும் மாதரை வருணிக்கின்றன.

---

சிறக்கின்ற வாண்முகமுஞ் செங்காந்தட் கையான்
முறுக்குநெடு மூரிக் குழலுங்—குறிக்கிற்
கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட காட்சி
யரும்பாம் பணைமுலையா யாம். 14.

சோர்புனலின் மூழ்கி யெழுவாள் சுடர்நுதன்மேல்
வார்குழலை நீக்கி வருந்தோற்றம்—பாராய்
விரைகொண் டெழுந்தபிறை மேகத் திடையே
புரைகின்ற தென்னலாம் பொற்பு. 15.

செழுநீல நோக்கெறிப்பச் செங்குவளை கொய்வாண்
முழுநீல மென்றயிர்த்து முன்னர்க்—கழுநீரைக்
கொய்யாது போவாளைக் கோல்வளைக்குக் காட்டினான்
வையாரும் வேற்றடக்கை மன். 16.

---

இதன்பின்வரும் செய்யுள் நளவேந்தனும் தமயந்தியும் நீராடி உவந்ததைச் சொல்கின்றது.

காவி பொருநெடுங்கட் காதலியுங் காதலனும்
வாவியு மாறுங் குடைந்தாடித்—தேவிற்
கழியாத சிந்தையுடன் கங்கைநதி யாடி
யொழியா துறைந்கா ருவந்து. 17.

---

இனிவரும் ஐந்து செய்யுள்கள் நளனோடு தமயந்தி ஊடல் கொள்வதையும் அவ்வூடலை அவன் தணிப்பதையும் வருணிக்கின்றன. தனது ஆசையெல்லாம் நாயகன்மீது வைத்திருக்கின்ற ஓர் மனைவி, அவ்வாறே தன் நாயகன் ஆசை அவ்வளவிற்கும் தானே பாத்திரமாகவேண்டுமென்று எதிர்பார்ப்பது இயற்கையே. ஆதலால் தன்னையல்லாது அயலில் வேறு ஒருத்தியிடத்தில் தன் நாயகனது கருத்துச் சிறிது நாடியதென்று இவள் நினைத்தா [illegible] றாள். அவனுக்கு வேறொருத்தியினிடத்தும் கா[illegible] என்று தேரும் பொருட்டு இவள் எப்பெ[illegible] வன் சொல்லெல்லாம், பார்வை யாவும், [illegible] யும் ஆராய்ந்தவண்ணமா யிருக்கவே, அ[illegible] தன்பால் அன்பிற் குறைவினாலேனும் எ[illegible] ஒருத்திபால் அன்பினாலேனும் நே[illegible] சந்தேகம் பிறக்க வழியுண்ட[illegible] த்துக் கொண்டு [illegible]

இன்பத்தையே வளர்க்கின்றதெனக் கருதுவார். ஒவ்வொரு காவியத்திலும் ஊடல் வருணிக்கப்படும்.

நளனுந் தமயந்தியும் பொழிலும்நீரும் ஆடிக் களிப்புடைய மனத்தவராய் மகிழ்ந்திருக்கின்ற சமயத்தில் ஊடல் விளைகின்றது. உவகை மிகுதியாயிருக்கின்ற காலத்தில்தான் அதற்கு இடையூறும் நேர்வது உலக அநுபவமாதலால் அதற்கிணங்கியே கவிகள் தம் நூலில் ஊடலைத் தக்க இடம்பார்த்து அமைக்கின்றனர்.

---

நறையொழுக வண்டுறையு நன்னகர்வாய் நாங்க
ளுறையு மிளமரக்கா வொக்கு—மிறைவளைக்கைச்
சிற்றிடையாய் பேரல்குற் றேமொழியாய் மென்முறுவ
பொற்றொடியாய் மற்றிப் பொழில். [வற் 18.

பதப்பிரிவு:—நறை ஒழுக வண்டு உறையும் நல் நகர்வாய் நாங்கள் உறையும் இள மரம் கா ஒக்கும் இறை வளை கை சிறு இடையாய் பேர் அல்குல் தேன் மொழியாய் மென் முறுவல் பொன் தொடியாய் மற்று இ பொழில்.

அன்வயம்:—இறைவளைக்கைச் சிறு இடையாய், பேர் அல்குல் தேமொழியாய், மெல்முறுவல் பொன் தொடியாய், இப்பொழில், நல்நகர்வாய் நாங்கள் உறையும், நறை ஒழுக வண்டுஉறையும் இளமரக் கா ஒக்கும் (என்றான் நளன்)

பதவுரை.

இறை - முன்கையில்
வளை - வளையல்களை அணிந்த
கை - கைகளையும்,
சிறு - சிறிய
இடையாய் - இடுப்பையும் உடையவளே,
பேர் - பெரிய
அல்குல் - அல்குலையும்
தேன் - இனிய
மொழியாய் - சொற்களையும் உடையவளே,
மெல் - மிருதுவான
முறுவல் - சிரிப்பையும்
பொன் - பொன்னாற் செய்த
தொடியாய் - வளையல்களையும் அணிந்தவளே,
இ - (இங்குக் காண்கின்றதாகிய) இந்த
பொழில் - சோலையானது
நல் - நல்ல
நகர்வாய் - (மாவிந்த) நகரத்தில்
[illegible]கள் - நாங்கள்
[illegible] தங்குவதும்,

விரிவுரை:—இவர் செல்லும்வழியில் இருந்த ஒரு சோலையைக் காட்டித் "தமயந்தி, மாவிந்தநகரத்தில் நாங்கள் போய்த் தங்குகின்ற சோலையைப் போன்றிருக்கிறது இந்தச் சோலை" என்று சொன்னதுதான் நளன் செய்த பாவம். உடனே தமயந்தி ஊடல் கொண்டாள். நாங்கள் என்று இவன் தன்மைப் பன்மையை உபயோகித்ததால் அவளுக்குச் சந்தேகம் பிறந்து கோபமாய் வளர்ந்தது. 'தன்னையும் தன் காதல் மாதரையும் சேர்த்துச் சொல்கின்றான். எனவே, அவனுடைய காதலுக்குரிய மாதர் பலர் நகரில் இருத்தல் வேண்டும்' என ஊகித்தாள். நளன் யாரைக் கருதி நாங்கள் என்றியம்பினனோ அறியோம்; தன் பரிசனங்களைச் சேர்த்துச் சொன்னதா யிருக்கலாம்.

நறையொழுக வண்டுறையும் நன்னகர்வாய் நாங்கள் உறையும்......என்று நளன் சொல்லிவருகையிலேயே கோபக்குறி தமயந்தியின் முகத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். அதைக் கண்டதும் மன்னவன், கெட்டது தன் குடி எனப் பயந்துபோயினன். 'ஓராமல் ஏதோ உரைத்துவிட்டேன்' எனும் அச்சம் துண்ணென அவன் மனத்துள் புகுந்ததாற்றான், உடனே அவளைப் பலவாறு புகழ்ந்து சினத்தைத் தணிக்கப் புகுந்தனன். அதனிலும் வார்த்தை தடுமாறுகின்றது. இறைவளைக்கைச் சிற்றிடையாய் என்பதைத் தொடரின்படி பார்த்தால், முன்கையில் வளையல் அணிந்த கைகளையுடைய இடுப்பை உடையவளே,' என்று ஆகி இடுப்போடு கை சேர்கின்றது. அவ்வாறே அல்குலுக்கு மொழியும் முறுவலுக்குத் தொடியும் சேரக்கூடியதாய்ச் சொற்றொடர்கள் நடக்கின்றன. இது இவன் உற்ற கலக்கத்தால் வாய்விரைந்து சொற்களை அடுக்கும் செய்தி. (நாமிங்குப் பொருள் பொருந்துவதற்காக உம்மைத்தொகையாகக் கொண்டோம்)

ஊடிச்சினந்த தமயந்தி உரைப்பதை அடுத்தசெய்யுள் கூறும்.

---

கன்னியர்தம் வேட்கையே போலுங் களிமழலை
தன்மணிவா யுள்ளே தடுமாற—மன்னவனே
இக்கடிகா நீங்க ளுறைபு மிளமரக்கா
ஒக்குமதோ வென்றா ளுயிர்த்து. 19.

பதப்பிரிவு:—கன்னியர்தம் வேட்கையே போலும் களி மழலை தன் மணி வாய் உள்ளே தடுமாற மன்னவனே இ கடி கா நீங்கள் உறையும் இள மரம் கா ஒக்குமதோ என்றாள் உயிர்த்து.

அன்வயம்:—(உடனே தமயந்தி) உயிர்த்து, களி மழலை தன் மணிவாயுள்ளே தடுமாற, "மன்னவனே, இக் கடிகா நீங்கள் உறையும் இளமரக்கா ஒக்குமதோ என்றாள்—(இப்படி அற்பத்திற் கெல்லாம் ஊடல் கொள்வது) கன்னியர்தம் வேட்கையே போலும்.

பதவுரை.

நளன் சொன்னது கேட்ட தமயந்[illegible]

இ - இந்த
கடி - வாசனை பொருந்திய
கா - சோலையானது
நீங்கள் - நீங்கள்
உறையும் - தங்குகின்ற
இள - இளமையான
மரம் - மரங்களுடைய
கா - சோலையை
ஒக்குமதோ - ஓகோ! ஒத்திருக்குமோ
என்றாள் - என்று கூறினாள்.
கன்னியர்தம் - மாதர்களுடைய
வேட்கையேபோலும் - ஆசை இதுதானோ!

விரிவுரை:—தமயந்தி கொண்ட கோபம் மிகவும் தரமானது. 'மன்னவனே' என்று அவள் நளனைக் கூப்பிட்டதைவிடச் சுடுசொல் வேறு இல்லை. "நாயகன் அன்பன் காதலன் என்பதெல்லாம் நேற்றோடு போயிற்று. இனி யாருக்கும் நீ அரசனாயிருப்பதுபோல் எனக்கும் அரசனேயன்றி அதனின் நெருங்கிய உறவு நமக்கில்லை" என்று வெறுப்போடு புறக்கணிக்கின்ற பொருள் 'மன்னவனே' என்ற சொல்லிலும் அதைச் சொல்கின்ற குரலிலும் அமைந்திருக்கின்றது.

அதுவன்றி, "நாங்கள் உறையும் இளமரக்கா ஒக்கும்" என்று நளன் சொன்ன சொற்களையே தமயந்தி எடுத்து, "நீங்கள் உறையும் இளமரக்கா ஒக்குமதோ" வென மீண்டும் அவன்முகத்தி லெறிதல் அவள் கோபத்தின் ஆழத்திற் கடையாளம். "நீ ஒரு காசிற்கும் பிரயோஜனம் இல்லாத கிழக் கழுதை" என்று ஒருவனை வைதால் அவன் கோபத்தினால், "நான் ஒரு காசிற்கும் பிரயோஜனம் இல்லாத கிழக் கழுதையோ," என்று அந்த வார்த்தைகளாலேயே கேட்பது யாவரும் அறிவர்.

"இவன் காதல் அடங்கலும் எனதே என்று நான் எண்ணியிருக்கப் பத்துப்பேரில் ஒருத்தி என் ஆகவா என் கதி முடிந்தது" என்ற துன்பம் பெருக அவள் நெட்டுயிர்ப்புவிட்டனள். 'மன்னவனே' என்றழைத்தது வெறுப்பினால் விளைந்தது. வாயிற் சொல் குழறியதற்குக் காரண[illegible] அவள் மனத்தில் உண்டான தடுமாற்றம். "[illegible] உறையும் இளமரக்கா ஒக்குமதோ' என்[illegible] கோபத்தால் வந்த வசை.

'கன்னிய[illegible]கையே போலும்' என்பதற்குப் பல பொ[illegible]லாம்:—

(1) "[illegible]ரத் தனக்கு ஆசைக்கிழத்தியராய் வைத்[illegible] 'நாங்கள், என்று இவன் கூறினனே' [illegible]மனதில் எண்ணினவளாய், இ[illegible]க் காட்டிய

ளுடைய காதல் இப்படிப்பட்டதுதானோ' என்று பொருள்படும். 'மாதருடைய காதலானது, குற்றம் இல்லாத இடத்திலும் ஒரு வீணான சந்தேகத்தைத் தம் நாயகன் மீது கற்பித்துக்கொண்டு வருந்தும்படி செய்யும் என்று சொல்வார்களே; அதற் கிணங்கத் தமயந்தியும் இங்கு இப்படிக் கோபித்தனள் போலும்,' என்று இதைக்கவியின் கூற்றாய்ப் பொருள்கொள்வதே அர்த்தச் சிறப்புடையதாவதுமன்றி இலக்கணத்திற்கும் இணங்கியதாகும். கன்னியர்தம், என்பது ஆறும்வேற்றுமைக் கிழமைப்பொருள். ஆதலால் கன்னியர்தம் வேட்கை, என்னும்போது கன்னியர்களுடைய ஆசை, என்று ஆசையை உடைத்தாயிருப்பவர் கன்னியர் எனக் கொள்வதே தகுதி. கன்னியர்தம் வேட்கை என்றதற்கு நளன் 'கன்னியர்பால் வைத்த வேட்கை' என்று கொண்டாலன்றி முன்னிரண்டு பொருள்களும் பொருத்தமுடையன வாகா. அது ஏழாம் வேற்றுமையாகும். பொன்னாசை, என்றது பொன்னினுடைய ஆசை என ஆறும்வேற்றுமையைப்போலவே வழக்கத்தில் விரிந்தாலும் ஆசையை உடைத்தாயிருப்பது பொன் அன்று. 'பொன்னினிடத்தில் உள்ள ஆசை' என்ற ஏழாம் வேற்றுமையே அதற்கு ஏற்றது. எனவே, 'கன்னியர்தம் வேட்கை' என்றதில் தம் என்னும் சொல்லுருபு ஆறும்வேற்றுமையதாகையால் கிழமைப் பொருள் உடையதாய், 'மாதர்பால் வைத்த ஆசையோ' என்றபொருள் குறிக்காமல், 'மாதர்களினுடைய ஆசை, (அதாவது, மாதர் தம் நாயகர்பால் வைக்கின்ற ஆசை) இவ்வகைத்தோ' என்பதைக் காட்டும்.

---

தொண்டைக் கனிவாய் துடிப்பச் சுடர்நுதன்மேல்
வெண்டாள மென்ன விபர்வரும்பக்—கெண்டைக்
கடைசிவப்ப நின்றாள் கழன்மன்னர் வெள்ளைக்
குடைசிவப்ப நின்றான் கொடி. 20.

பதப்பிரிவு:—தொண்டை கனி வாய் துடிப்ப சுடர் நுதல்மேல் வெண் தாளம் என்ன விபர்வு அரும்ப கெண்டை கடை சிவப்ப நின்றாள் கழல் மன்னர் வெள்ளை குடை சிவப்ப நின்றான் கொடி.

அன்வயம்:—கழல்மன்னர் வெள்ளைக்குடை சிவப்ப நின்றான் கொடி, தொண்டைக்கனி வாய் துடிப்ப, சுடர்நுதல்மேல் வெண்தாளம் என்ன விபர்வுஅரும்ப, கெண்டைக் கடை சிவப்ப, நின்றாள்.

பதவுரை.

கழல் - வீரகண்டையை அணிந்த
மன்னர் - (பகை) அரசர்களின்
வெள்ளை - வெண்மையான
குடை - குடைகள் [சிவக்கும்படி
சிவப்ப - (போரிற்சாய்ந்து இரத்தம்பட்டு)
நின்றான் - வெற்றியுடன் நின்ற வீமராஜனது
கொடி - கொடி போன்ற மகள்,
தொண்டை - கொவ்வைசெடியின்
கனி - பழத்தைப்போன்ற
வாய் - உதடுகள்
துடிப்ப - துடிக்கவும்.
சுடர் - ஒளிபொருந்திய
நுதல்மேல் - நெற்றியின்மேல்
வெண் - வெண்மையான
தாளம் என்ன - முத்தைப்போல
விபர்வு - வேர்வைத்துளிகள்
அரும்ப - அரும்பவும், [கண்களின்
கெண்டை - சேல்மீனைப் போன்ற அவள்
கடை - கோடி
சிவப்ப - சிவக்கவும்
நின்றாள் - (கோபத்தோடு) நின்றாள்.

கருத்து:—பராக்கிரமம் பொருந்திய வீமராஜனது புத்திரி மிகுந்த கோபத்தோடு நின்றாள்.

குறிப்பு:—(1) ஒரு பொருளின் பெயர் அப்பொருளைக் குறிக்காமல் வேறொன்றைக் குறிக்க நேர்ந்தால் அப்பொழுது அது ஆகு பெயர் எனப்படும். இதன் இலக்கணத்தை முன் பல பாடங்களில் விரிவாகக் கூறியிருக்கிறோம். ஒரு குணத்தின்பெயர் அந்தக் குணத்தை உடையவோர் பொருளைக் குறிக்குமானால் அது குணம் அல்லது பண்பு ஆகுபெயர். நீலம் என்ற நிறம் அந்தக்குணத்தைக் குறிக்காமல் அக்குணமாகிய நிறத்தை உடைய மலரைக் குறிக்கின்றபோது அது குண ஆகுபெயர். அவ்வாறே உவமை ஆகுபெயரும் இடவாகுபெயரும்வரு நுகின்றவிதத்தைக்காட்டியுள்ளோம். இச்செய்யுளில், 'கெண்டைக்கடை சிவப்ப' என்ற இடத்தில் சிவந்தது கெண்டை மீனின் கோடியன்று. சந்தர்ப்பத்திற்கிணங்கக் கெண்டை, என்ற மீனின் பெயரை அது எதற்கு உவமையாயிருக்கின்றதோ அப்பொருளாகிய கண்ணிற்கு ஆக்கிக் கொள்வதால், இது உவமை ஆகுபெயர். கொடி என்றதும் உவமையாகு பெயராய்த் தமயந்தியை உணர்த்தியது. இனி, முதல் ஆகு பெயர் என்று ஆகு பெயரில் ஒருவிதம் இருக்கின்றது. முழுவதாகிய ஒன்றன் பெயர் அதன்பாகத்தைக் குறிக்குமாயின் அது முதலாகுபெயர் எனப்படும். வாய் என்பது, பல் உதடு நாக்கு ஆகிய இப்பாகங்கள் சேர்ந்த ஆனவொரு உறுப்பு. இங்கு 'வாய்துடிப்ப' என்றதில் துடித்தது முதற்பெயராகிய வாய் அன்று. அதனின் ஒரு பாகமாகிய உதடே துடித்தது. ஆதலால் வாய் என்றது அதன் ஒரு பாகமாகிய உதட்டைக் குறித்தபடியால் முதல் ஆகு பெயர். அப்படியே, மோதிரத்தைக் கையிற் போட்டான், என்ற வழக்கில் கை என்பது முதலாகு பெயராய் விரலென்ற பொருளில வருவதாகும்.

---

அறிக்கை :—

கலாநிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவர் 10 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[546-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து 4-ம் தசகம்

1-ம் பாசுரம்.

புகழுநல் லொருவ னென்கோ
பொருவில்சீர்ப் பூமி யென்கோ
திகழுந்தண் பரவை யென்கோ
தீயென்கோ வாயு வென்கோ
நிகழுமா காச மென்கோ
நீள்சுட ரிரண்டு மென்கோ
இகழ்விலிவ் வனைத்து மென்கோ
கண்ணனைக் கூவு மாறே

அவதாரிகை:—சென்ற தசகத்தில் உலகத்தினரை விளித்து, ஆயுள் எல்லை குறுகி எய்த்து இளைப்பதன் முன்னம் "திருவேங்கடம் மொய்ப்பூந் தடம் தாழ்வரையை அடைமினோ" என்று கற்பித்தார். திருமலையை யடைந்து திருவேங்கடமுடையானைப் பற்றுங்கோள் என்று மேல் கற்பிக்கவேண்டி, அவனது ஸர்வவஸ்து சரீரதத்துவத்தையும், எல்லா வஸ்துக்களிலும் அநுப்பிரவேசித்தாலும் அவற்றின் தோஷங்களில் தட்டாமலிருக்கிற ஸ்திதியையும், அவனது திவ்வியமங்கள விக்கிரஹத்தையும் இந்தத் தசகத்தில் வர்ணிக்கிறார். இவர் உலகத்தாரை விளித்தது "ஒழிவில் காலமெல்லாம் வழுவலிர் அடிமை செய்ய அல்லவோ?"; அப்படி இருக்க இப்பதிகத்தில் காண்பது அவனது ஸமிருதியும் கீர்த்தனமுமேயாக இருப்பது எப்படி ஒவ்வும் என்றால்—அவனுக்கு எவ்விதக் கைங்கரியம் செய்யப் புகுந்தாலுங் "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றபடி அவன்குணாதிசயங்களிலும் திவ்வியசௌந்தரியத்திலும் ஐம்புலன்களும் ஈடுபட்டுக் கைங்கரியம் ஒன்றும் நிறைவேறச்செய்யவொண்ணாதபடி இடையூறுபடுவதாலும் வாசா கைங்கரியம் ஒன்றுமே செய்யச் சுலபமாயிருப்பதாலும் இப்பதிகம்பாடித் தம்மனதால் திருப்தியடைகிறாரென்று கொள்ளவேண்டும்.

உரை:—கண்ணனைக் கூவுமாறு - புகழ்க்குரித்தான கல்யாண குணசாலியான ஒப்பற்றவன் என்றுசொல்வேனோ? பொருவில்லாத (அதாவது ஒப்பற்ற) சீர்மையுள்ள பூமி என்று சொல்வேனோ? அழகாய் விளங்கும் சீதளமான சமுத்திரமென்று சொல்வேனோ? தீ என்று சொல்வேனோ? வாயுவென்று சொல்வேனோ? எப்போதும் எல்லாத் திக்குக்களும் சுற்றி ஸ்திரமாய்க் கிடக்கும் ஆகாசமென்று சொல்வேனோ? நீர்க்க தேஜஸுகளானவும் கிரணசாலிகளானவுமான சூரியசந்திரர்களென்று நான் சொல்வேனோ? அல்லது சொன்ன இவைகளெல்லாமே என்றுசொல்வேனோ? எவ்விதம் சொன்னால் நிறைவாகும்?

விசேஷக் குறிப்புக்கள்:—"விஷ்ணு" பதத்திற்குத் தாது "விச்"—எதிலும் உள்கிடந்து அநுப்பிரவேசிப்போன் என்றர்த்தம். தத்துவஉணர்ச்சி இவ்வாறு பெரிதாயினும், ஆழ்வாரின் இலக்கு—இவை ஒன்றும் கலப்பில்லாமல் வைகுண்டத்தில் மூர்த்திமானாயிருக்கிற பகவானது திவ்விய மங்கள விக்கிரஹமே. இது போலவே சைவ சமயாசாரிகள் நால்வரது இலக்கும் மூர்த்திமானான பரமசிவமே ஆகக் காண்கின்றோம். இப்பாசுரத்திலேயே "கண்ணனைக் கூவுமாறு" என்று படித்திருப்பதே அதற்கு நிதர்சனம்.

2-ம் பாசுரம்

கூவுமா றறிய மாட்டேன்
குன்றங்க ளனைத்து மென்கோ
மேவுசீர் மாரி யென்கோ
விளங்குதா ரைக ளென்கோ
நாவியல் கலைக ளென்கோ
ஞானநல் லாவி யென்கோ
பாவுசீர்க் கண்ண னெம்மான்
பங்கயக் கண்ண னையே

உரை:—எல்லாக் குன்றுகளுமென்பேனோ உலகை அளிக்கும் மழை என்பேனோ? தேஜஸுகளான நக்ஷத்திராதிகளென்பேனோ? நாக்கினாலே உரைக்கக் கூடிய கலைகளென்பேனோ? சாஸ்திரத்தால் உணர்ந்த வித்தைகளின் ஆத்மாவென்று சொல்வேனோ? வெகு யசஸையுடைய என்னம்மான் பங்கயக்கண்ணனைக் கூவுமாறு அறிகிலேன். நிஷ்கரிஷிப்பது அரிது!

குறிப்பு:—எவ்வண்ணம் சொன்னாலும் மனதிற்குத் திருப்திவாராததால் அதுவோ இதுவோ வென்று பிரமித்துக் கூறுகிறாரென்று கொள்ளவேண்டும். மேலுமிப்படியே.

3-ம் பாசுரம்

பங்கயக் கண்ணனென்கோ பவளச்செவ் வாயனென்கோ
அங்கதி ரடிய னென்கோ வஞ்சன வண்ணனென்கோ
செங்கதிர் முடியனென்கோ திருமறு மார்பனென்கோ
சங்குசக் கரத்தனென்கோ சாதிமா ணிக்கத்தையே

உரை:—ஜாதி மாணிக்கத்திற்கு ஒப்பானவனைப் பங்கஜக்கண்ணன் என்கோ; பவழம்போன்ற செவ்விய வாயுடையவனென்கோ; அழகான திருவடி தேஜஸுடையவனென்கோ? தீப்தமான சூரிய கிரணங்கள் போன்ற கிரீடத்தையுடையவன் என்று சொல்லட்டுமோ. மார்பினிடத்தில் மஹாலக்ஷ்மியைத் தனக்குஅழகிடும் மறுவாகவுடையவன் என்று சொல்வேனோ? திவ்விய சோபையுள்ள சங்கு சக்கரங்களைத் தரித்திருப்பவன் என்று சொல்வேனோ?

குறிப்பு:—முன்னிரண்டு பாசுரத்திலும் தத்துவ உணர்ச்சியால் பகவானது ஸூக்ஷ்மஸ்திதியை அநுபவித்தவர் இப்பாசுரத்தில் இவ்வாறு கூறுவதால், அவனது அஸாதாரண திவ்விய மங்களமூர்த்தியான ஸ்வரூபத்தைத் தியாந மனனத்திற்கு உதவியாகக் கொள்ளவேண்டுமென்பதே நம்மாழ்வாரின் மதமென்று நாம் கருதவேண்டும்.

4-ம் பாசுரம்

சாதிமா ணிக்க மென்கோ
சவிகொள்பொன் முத்த மென்கோ
சாதிநல் வயிர மென்கோ
தவிவில்சீர் விளக்க மென்கோ

ஆதியென் சோதி யென்கோ
வாதியம் புருட னென்கோ
ஆதமில் காலத் தெந்தை
யச்சுதன் அமலனையே.

உரை:—ஆதுமில்காலத்து - ஒன்றுமில்லாத காலத்தில்-அதாவது நடைபெறப் பிரளயகாலத்தின் துடக்கத்தில், எந்தை-சூட்சும சித்து அசித்து இவைகளின் சரியான பரம்பொருள், அச்சுதன்-ஒரு காலத்திலும் அழியாதவனான அமலனை, மேல்படி சித் அசித் இவைகளில அநுப்பிரவேசிப்பது கொண்டு அவைகளின் தோஷங்களால் தட்டாதவனை, சாதிமாணிக்கமென்கோ,சவிகொள்-ஜ்வலிக்கிற,சுவர்ணம் முத்துஎன்கோ, சாதிநல் வயிரம் என்கோ, தவிவு - இடைவீடு, இல்-இல்லாத,விளக்கம்-பிரகாசமென்கோ, ஆதியம்சோதி-பரமபதத்தில் ஊர்ஜிதமாய் விளங்கும் மூர்த்திமான் என்று சொல்வோனே, ஆதியம் புருடன் என்கோ - ஆதி சுந்தரபுருஷன் என்று சொல்வேனே?

குறிப்பு:—இப்பாசுரத்தில், பிரளயத்திற்குமுன் நிகழும் தத்துவத்தைக்குறிப்பிடுவதாகப்பூர்வ உரைகாரர்கள் கொள்வார்கள்.

---

5-ம் பாசுரம்.

அச்சுத னமல னென்கோ அடியவர் வினைகெடுக்கு
நச்சுமா மருந்த மென்கோ நலங்கடா லமுத மென்கோ
அச்சுவைக்கட்டி யென்கோ வறுசுவை யடிசிலென்கோ
நெய்ச்சுவைத் தேறலென்கோ கனியென்கோ பாலென் [கேனே

உரை:—அச்சுதன் - அழிவில்லாதவன், அமலன்-உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களினுள்ளிருந்து கடவுளாக அவற்றை எல்லாம்நடத்தினாலும் அவைகளின் தோஷங்கள் தட்டாதவன்-அதாவது தூய்மையையே குணமாக உடையவன். நச்சும்-எல்லாராலும் விரும்பப்படுகிற, மாமருந்து-பெரிய ஔஷதம்; அடியவர்கள் தங்கள் பாபங்களைப்போக்கிக்கொள்வதற்குப் பெரிய உபாயமாகத் தேடி வழிபடுகின்றவன், சமுத்திரத்தில் கடைந்தெடுத்த அமிர்தம் என்கோ, அல்லது அந்த அமிர்தமே திரண்டு உருண்டையாக எடுக்கப்பட்ட கட்டி என்கோ, அறுசுவை அடிசில் என்கோ, நெய்ச்சுவை என்கோ, தேனென்கோ, பழுத்த பழமென்கோ, பால் என்று சொல்வேனோ?

குறிப்பு:—ஆச்ரிதர்க்கு, அடிசில், பால், கனி அமிர்தம் இவைபோன்ற அவசியமான இனிப்பான வஸ்துக்களாக எமபெருமான் அமைந்திருக்கின்றான் என்பது திருவுள்ளம்.

---

6-ம் பாசுரம்

பாலென்கோ நான்கு வேதப்
பயனென்கோ சமய நீதி
நூலென்கோ நுடங்கு கேள்வி
யிசையென்கோ விவற்றுள் நல்ல
மேலென்கோ வினையின் மிக்க
பயனென்கோ கண்ண னென்கோ
மாலென்கோ மாய னென்கோ
வானவ ராதி யையே.

உரை:—வானவராதியை - தேவர்களுக்கெல்லாம் காரணமானவனை, நான்கு வேதப் பலமென்று சொல்வேனோ? அதாவது அவைகளால்கூறப்படும்முதல்காரணமென்பேனோ? சமயநீதி நூலென்கோ-வெவ்வேறு சித்தாந்தங்களால் நியாயமென்று நிரூபிக்கும் சாஸ்திரங்களால் கூறப்படுகின்றவன் என்று சொல்வேனோ? கேட்டமாத்திரத்தாலே மயக்கத்தக்க வோர் (இசை) பாட்டென்றுசொல்வேனோ, இவற்றுள்கீழ்ச்சொன்ன ரஸவஸ்துக்களையெல்லாங் காட்டிலும் வெகுமேலான, வினையின்மிக்கபயன்—மனிதர் செய்யும் சுகிருதமான புண்ணியங்களுக்குப் பலமென்று சொல்வேனோ, கண்ணன் - கண்களுக்கு இனிய சுந்தரமூர்த்தி என்று சொல்வேனோ? மாயன் - ஆச்சரியமானவனென்று சொல்வேனோ? மால்-பக்தர்களைத் தன்னிடம் பரவசப்படுத்தும் மூர்த்தியென்று சொல்வேனோ?

குறிப்புரை:—பகவத்கீதையில் பததாவது ஆகிய "விபூதியோகநாம" அத்தியாயம்போல் இந்தத் தசகம் பகவானது உதகிரஷ்டங்களைப் பரக்கப்பேசியது.

---

# எல்லாம் வீணே?

## ஒரு சிறு ஏகாங்க நாடகம்

[552-வது பக்கத் தொடர்ச்சி]

### மூன்றும் களம்

இடம்:—மதுரையில் கோதண்டராம ஐயர் வீடு.

காலம்:—காலை.

[திருநாவுககரசம் சீனுவாஸமூர்த்தியும் பேசிககொணடு வருகிருர்கள்]

திரு:—ஆனல், அவர்கள் நேற்றையதினமே போய்விட்டார்களா?

சீனு:—ஆமாம், என்னையும் தன்னுடன் கூடவே வந்து பெண்ணைப் பார்க்கச்சொல்லி ரொம்பதூரம் கேட்டார். முதலில் மாட்டேன் என்றேன். அப்பா கோவித்துக்கொண்டதின்மேல் சம்மதித்தேன். நான் சம்மதித்ததும் அவர் மாறிவிட்டார். தான் நேராகப்போகவில்லையாம். திருச்சிராப்பள்ளியில் "கேஸ்" விஷயமாக ஒரு நாள் தங்கிவிட்டுப் போகவேண்டிய காரியம் இருக்கின்றதாம். ஆகையால் என்னை நேராக நாளையதினம் புறப்பட்டுப் பட்டணம் வந்துவிடும்படி சொல்லிவிட்டுப் போனர்.

திரு:—ஆனல், நாளையதினம் நீ பட்டணம்போகிருய்?

சீனு:—எனக்கென்ன வேறு வேலை இல்லையா? அந்தத் திருச்சிராப்பள்ளி "கேஸ்' எல்லாம் பொய் முன்னலேயே போய், வீட்டைஎல்லாம் ஜம்பம் பண்ணி வைத்து, பெண்ணிற்கு இரவல்நகை எல்லாம் வாங்கிப்போட்டு, குச்சுப்பிடித்த இரவிக்கை தைத்து, உடைந்த'ஹார்மோனியம்'பெட்டி ஒன்று ஒருமூலையில் போட்டுவைக்க வேண்டுமோ அல்லவோ, இதற்கெல்லாம் நேரம் வேண்டாமா? அது கிடக்கட்டும்

இதைப்படித்துப்பார் (திருநாவுக்கரசிடம் வர்த்தமானப் பத்திரிகைத் துண்டு ஒன்று கொடுக்கிறான்.) நாளைய தினம் நான் போவேனோ மாட்டேனோ வென்பது தெரியும்.

திரு:—(வாசிக்கிறான்) 'கணவன் தேவை' பெண் செட்டி ஜாதி, பதினேழுவயதாயிற்று இங்கிலீஷ் நன்றாய்ப் படித்திருக்கிறாள் பிள்ளை இருபத்தைந்து வயதிற்குள் இருக்கவேண்டும். பிராமணர்களுள் எந்த வகுப்பைச் சேர்ந்தவராக வாவது இருக்கலாம். வேணுமென்பவர்கள் விண்ணப்பக் கடிதத்தை இப்பத்திரிகையைப் பார்வையிட்டுக் க. ப. நாதன் என்னும் விலாசத்திற்கு எழுதவும்''—நல்லது இதற்கென்ன ?

சீனு:—இதைப்பற்றி உனக்கென்ன தோன்றுகிறது.

திரு:—என்ன! தற்காலப் போலிநாகரிகத்தால் உண்டாகும் மானக்கேடுகளுள் இது வொன்று. வர்த்தமானப் பத்திரிகைகள் விவாகத் தரகரி வேலையும் எடுத்துக்கொள்ளவேண்டாமென்று அவைகளுக்கு எழுதினேன். செவிடன் காதில் சங்கு ஊதினால் என்ன பலன் ?

சீனு:—இதற்குள்ளேயே இப்படி அக்கினி கக்குகிறாயே. இன்னும் நான் பண்ணியிருப்பதைக் கேட்கவில்லையே!

திரு:—சொல்லிவிடு!

சீனு:—அந்தப் பெண்ணின 'போடோ' படம் ஒன்று அனுப்ப எழுதியிருந்தேன்; வந்தும் இருக்கிறது. இன்னும் திறந்துபார்க்கச் சரிப்படவில்லை. கிருஷ்ணா, ஏ கிருஷ்ணா!

(நாராயணன் கிருஷ்ணனாக மாறுவேஷத்தில் வருகிறான்)

என் மேஜையின்மேல் படம் ஒன்று, மூடி திறக்காமல் வைத்திருக்கிறேன். அதைக் கொண்டுவா!

நாராய:—ஓ! (போகிறான்)

திரு:—இவனாரடா, பார்த்தமுகமா யிருக்கின்றதே!

சீனு:—புதிய சமையல்காரன். நேற்று இரவு அமர்ந்தான். அந்த நாராயணன் ஜாடையாயிருக்கிறானல்லவா. இவன் பாலக்காட்டான்.

(நாராயணன் ஒரு புஸ்தகத்தைக் கொண்டுவருகிறான்)

சீனு:—இதல்ல கிருஷ்ணா, அட்டை மாதிரியாகக் கடுதாசு சுற்றி ஸடாம்பு ஒட்டி இருக்கும். அதைக் கொண்டுவா.

நாரா:—ஓ!

(நாராயணன் போகிறான்)

திரு:—இதென்ன, நான் கொடுத்த வாலிவலைப் படலமா? (பிரித்துப்பார்த்து) என்ன மூர்த்தி, புஸ்தகம் கொடுத்தால் அதை ஜாக்கிரதையாய்ப் படிக்க வேண்டாமா? இப்படியா கிழித்துவிடுகின்றது!

சீனு:-எங்கே! நான் கிழித்ததில்லை. நான் அதைத் திறக்கவே இல்லையே! தொடவே இல்லையே!

திரு:—அதற்குத்தான் கேட்டேன். வாங்கி இருபது நாளாயிற்று, தொடவே இல்லையாம் திறக்கவே இல்லையாம். பின்னே, எதற்காக என்னிடம் மன்றாடி வாங்கினாயோ! உனக்கு இதெல்லாம் வாசிக்க உடம்பு வணங்குமா ? ஜனசமூகத்தைச் சீர்திருத்தத் தலையிட்டுக்கொள்ளுவதென்றால் தயார்; முதலில் உன்னைத் திருத்திக்கொண்டல்லவோ....

[நாராயணன் படத்தைக் கொணடுவந்து கொடுக்கிறான். திருநாவுக்கரசு முதலில் அதை வாங்கிக்கொள்கிறான்]

திரு:—நான்தான் முதலில் பார்ப்பேன்.

(மேலே சுற்றி இருக்கும் கடிதத்தைப் பிரிக்கிறான். சீனுவாஸமூர்த்தி அதைச் சட்டென்று பிடுங்கிக்கொள்ளப் பார்க்கிறான். திருநாவுக்கரசு அவனை ஒரு கையால் தூரத்தில் பிடித்துக்கொண்டு படத்தைப் பார்த்துக் கொண்டே பரிகாசமாகப் பாடுகிறான்.)

* அண்ணை அடியாளாம்-அண்ணை அடியாளாம்
மின்ன லிடியாளாம் - மின்ன லிடியாளாம்
கண்ணை முழியாளாம் - கண்ணை முழியாளாம்

சீனு:—மின்னலிடியுமாயிற்று, அண்ணைடியுமாயிற்று. இதைக்காட்டு! காட்டு! ஐயோ காட்டேன்!

திரு:—என்ன அழகு! என்ன வர்ணம்! ஓதுகலை எண்ணிரண்டும் ஒன்றும் இவளது வதனமதியைப் பார்த்துக் கரைகாணாமல் இமையாநாட்டம் பெற்றிலம் என்றார் இப் பூலோக வாசிகள்! இருகண்ணால் அமையாதென்றார் அந்தர வானத்தவரெல்லாம்! உனக்கேற்றது ஆஹா இவ்வுருவமே! என்ன காது! என்ன மூக்கு! என்ன வால்!

சீனு:—என்ன! வாலா!

திரு :—நாககன்னிகையடா ; நாககன்னிகைகளுக்கு வாலில்லையோ!

(சீனுவாஸமூர்த்தி சட்டென்று படத்தைப் பிடுங்கிக்கொள்கிறான்)

சீனு:—என்னடாதிது! கழுதையின் படத்தைப் பிடித்து அனுப்பி இருக்கிறானே!

திரு:—இப்பிரபஞ்ச அனந்த சிருஷ்டியிலும் அவ்வவ் வினம் அவ்வவ்வினத்துடனேயே சேரவேண்டும் என்பது இயற்கையமைப்பின் கட்டளையன்றோ. அதற்கொப்ப உனக்குமோர் கழுதையை அனுப்பி இருக்கிறான். இவ் விவாகவிளம்பரம் செய்தவன் மிக்க புத்திசாலி என்பதற்கு ஐயமில்லை.

சீனு:—ஆனால் நான் கழுதையோ ?

திரு:—என்னைக் கேட்பானேன். உனக்கு மானம் என்பது ஒன்றுண்டானால் இவ்வவமானத்திற்குப் பரிகாரமாக நீயாகவே அந்தமான் தீவு சென்று மனதார ஒருவாரமாவது க்ஷேத்ரவாசம் செய்துவருவாய்.

சீனு:—யோசித்துப் பார்த்தால் எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. என்ன! திருநாவுக்கரசு, என்னை வையவேண்டுமானால் உனக்குப் புலவர் நடையில் பேச்சு வந்துவிடுகின்றதே.

திரு:—நல்லது, புலவர் மாதிரியே ஒரு சிறு பிரசங்கமும் செய்கிறேன் கேள்!

சீனு:—வேண்டாம். உனக்குத் தெரிந்ததெல்லாம் எனக்கும் தெரியும்; புண்பட்ட கண்ணில் கோலையும் இடாதே!

திரு:—என்ன! கொல்லர்தெருவில் ஊசி விற்கின்றனையா ? முதல்வகுப்புமுதல் 'பி. யல்.' வகுப்பு வரையிலும் நாம் இருவரும் ஒன்றாகத்தானே படித்து வருகிறோம். பரீட்சைக்கு வேண்டிய பாடங்கள் தவிர வேறொரு புஸ்தகத்தையும் நீ கையில் தொட்ட பாவத்தில் போனவனல்லன். நம் சுதேசச் சாகித்தியங்கள் ஏதாவது படித்திருக்கிறாயா ?

---

* "அன்ன நடையாளாம்; மின்னல் இடையாளாம் கன்னல் மொழியாளாம்;" என்பதை இவ்விதம், கல்வியறிவில்லாத் தெருக்கூத்தாடிகள் குளறிச்சொல்வதைப்போல் பரிகாசமாகச் சொல்கிறான்.

புராண இதிஹாஸங்கள் ஏதாவது தெரியுமா உனக்கு! பஞ்சபாண்டவர்கள் பேரைச் சொல் என்றால், 'அர்ச்சுனன், கிருஷ்ணன், விபீஷணன் இன்னொருத்தன், இன்னொருத்தன்'' என்கிற நிலைமையில் இருக்கிற, கற்றறிந்த இந்தியர்களுள் நீ யொருவன். ஆங்கில கவிகள்தான் அனேகம், ஆழ்ந்து படித்திருக்கின்றாயோ எனின் அதுவுமில்லை இப்படியிருக்க.........

[மீனாக்ஷி வருகிறாள்]

சீனு:—வா, அம்மா இங்கே ஒரு பிரசங்கம் நடக்கின்கின்றது.

திரு.—உங்களுக்கன்று என்பிரசங்கம். நிரக்ஷர குக்ஷியாகிய உங்கள் பிள்ளைக்கு! அரைகுறைத் தமிழையும் நம் சர்வகலாசாலைச் சங்கத்தார் வதை செய்து கொண்டு வருகிறார்கள். ஆடம் சித்திரவதை. இத் தமிழ்ஹத்தி அவர்கள் தலையிலும் அவர்கள் வம்சத்தின் தலையிலும் விடியட்டும்.

மீனாக்ஷி:—எதைப் பற்றிப் பேச்சு ?

திரு:—உங்கள் பிள்ளை கலியாணம் பண்ணிக்கொள்ள ஒரு உருவப்படம் வரவழைத்திருக்கிறான் பாருங்கள்.

மீனாக்ஷி:—இதென்ன கழுதையா ?

நாராய:—ஓ !

சீனு:—கிருஷ்ணா இங்கே நீ என்ன பண்ணுகிறாய் ? உன் வேலையைப் பார், போ;

(நாராயணன் போகிறான்)

மீனாக்ஷி:— ஓகோ, இதற்குத்தானா பத்திரிகையைப் பார்த்து என்னவோ எழுதிவிட்டு இரண்டு நாளாய்த் தபால் எதிர்பார்த்துக்கொண்டிருந்தானிவன். நேற்று உங்கப்பா தபாலை வைதது சரியாய்த்தான் இருக்கிறது. என்ன அசிங்கம் இதெல்லாம்!

திரு:—பேரசிங்கம் ! ஸ்த்ரீ புருஷ அமைப்பில், ஸ்த்ரீயானவள் சக்தி ஸ்வரூபம், அவளின்றிப் புருஷப் பிரயத்தனம் ஒன்றும் நிறைவேறாது. ஏன், தெய்வப் பிரயத்தனமுந்தான் ! வீணிற்கா பரமசிவன் உமைக்குத்தன்னுடலிற் பாதி கொடுத்திருக்கிறான். தெரியாமலா மஹாவிஷ்ணு இலக்குமியைத் தன் மார்பில் புதைத்து வைத்திருக்கிறான்? பிரமனும் காரியமின்றி ஸரஸ்வதியைத் தன் நாவில் சுமப்பானோ? தேவராயினும் மானுடராயினும் அவரவர்கள் செயலின் சாரம் சக்தியே. அவளன்றி ஓர் அணுவும் அசையாது என்னலாம். இத்தகைய சக்தியின் அம்சமாகிய ஸ்த்ரீகளையும் அச்சக்தியை வகிக்கும் தெய்விக விவாகத்தையும் குட்டிவேதாந்த சிரோன்மணிகள் வியாபார விவகார ஆழத்திற் கிழுத்துத் தள்ளி ஏஜண்டுகளையும், தையல்மிஷின்களையும், கணவன்களையும குடைகளையும் ஒன்றாய்க்குலுக்கி ஸுகந்த மூக்குத்தூளோடு பத்திரிகைகளில் விளம்பரம்செய்வதா ?

மீனாக்ஷி:—இந்த வயிற்றெரிச்சலைப் பார்த்துத்தான், நான் வரவழைத்துக்கொண்டிருந்த தமிழ்ப் பத்திரிகையை நிறுத்திவிட்டேன்.

சீனு:—இரம்மா, இன்னும் உபந்யாசம் முடியவில்லை. அப்புறமல்லவோ, அக்ராஸநாதிபதி தன் அபிப்பிராயத்தைக் கொடுக்கவேண்டும்.

திரு:—மூர்த்தி, இவ வாலிவதைப்படலம், தற்செயலாய் இப்பொழுது நம் கையில் எட்டிற்று. இதிலே பார்; இராமர் ஒளிந்திருந்து வாலியைக் கொன்றுவிட்டாரே அதாவது தெரியுமோ அல்லவோ உனக்கு? நிரபராதியாகிய தன்னை நிஷ்காரணமாய்க் கொன்றதற்காக வாலி பலவிதமாகக் காரணம் கற்பிப்பதுபோல் இராமரை ஏசுகின்றான். ஒரு காரணமும் பொருந்தவில்லை. ஆனால் நம் விஷயத்திற்கு வேண்டியது அவைகளுள் இரண்டடிகள்:—

"ஆவியைச் சநகன் பெற்ற
அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலும் செய்கை'

"அதாவது, "சீதை உன்னைவிட்டுப் பிரிந்த பிற்பாடு நீ வாய்மைச்செயல் அற்றனையோ ?" என்று வாலி கேட்கிறான். உலகத்திற்குச் சகல தர்ம மார்க்கங்களையும் நடந்து காட்டிப் போதிக்கவந்த எம்பெருமான் இவ்வநியாயக் கொலையைச் செய்து தருமத்தின் வேலியையே உடைத்துவிடுவாரோ என்னும் மூலக் கேள்விக்குக் கம்பர் இவ்விரண்டு அடிகளில் விடை யளிக்கின்றார்.

---

## குன்றுடையானும் மக்களும்

### இரண்டாம் புத்தகம் — 4. பன்றிப்போர்

[544-வது பக்கத் தொடர்ச்சி]

தங்காள் அண்ணன்மாரை யெதிர்கொண்டு, பாலும் பழமுங்கொடுத்துபசரித்து, 'நீங்கள் வேட்டைக்குப் போவதைக் கேட்டமாத்திரத்தில் என் புந்தி பதறுகிறது. இந்தப் பன்றி வெறும் பன்றியன்று; இது பழிக்குப் பழிவாங்க வந்தது; காளியம்மன் வரத்தாற் பிறந்தது; வீரதங்காளுடையது. நமக்குத் தீங்கு புரியும் நோக்கத்தோடு வேடுவர் இப்பன்றியை யனுப்பினர் போலும்! இந்த வேட்டையால் உங்களுக்கு நன்மையுண்டாகும் என்று எனக்குத் தோன்றவில்லை' என்றாள்.

பெரியண்ணன், 'அம்மா, நீ யொன்றுக்கும் அஞ்சாதே. கோட்டைக்கும் உனது அரண்மனைக்கும் தக்க காவல் நியமித்துள்ளோம்; அன்றியும், அரசருக்குச் சொன்ன சொல் தவறலாமா? படைதிரண்டு வேளாண் குளத்தருகில் நிற்கிறது, விடைகொடம்மா' என்றார்.

தங்காள், 'அண்ணா, விதியை விலக்குபவர் யார்? படைதிரண்டு நிற்கையில் நான் உங்களைத் தடுத்து ஆவதென்ன? போகிற இடத்திலே கண்ணுங் கருத்துமாய் இருந்துவாருங்கள்' என்று சொல்லி விடை கொடுத்தாள்.

அண்ணன்மார் குதிரையேறி வேளாண குளத்தை நாடி விரைவாகச் சென்றனர்.

வேளாண் குளக்கரையில் வேட்டைப்பறையும் தம்பட்டமும் முழங்குகின்றன. ஜனக்கூட்டமும் நாய்க்

கூட்டமும் யானைக் கூட்டமும் குதிரைக் கூட்டமும் வீரர் ஈட்டமும் கண்ணுக் கெட்டிய தூரமளவும் பரவியுள்ளன.

இப்பெரிய கூட்டத்தின் இரைச்சலைக் கேட்டு வேளாண் குளக்காட்டில் படுத்துத் தூங்கிய பன்றி கண்விழித்து, தனக்கு இடர்விளைந்ததென்று உணர்ந்து, மெல்ல எழுந்திருந்து ஒருவரும் அறியாவண்ணம் வீரமலைக்காட்டை நோக்கிப் புறப்பட்டது.

அண்ணன்மார் கூட்டத்தைக் கலைத்து, பன்றியைப் பல திசைகளிலும் தேடுமாறு ஏவினர்; நாய்களை விடுத்தனர்; செடிகளையும் புதர்களையும் அலைத்தனர்; காட்டைக் கலைத்தனர்; பன்றி காணப்படவில்லை.

சித்தினி யென்னும் பெரிய மோப்பமறியும் நாய் மண்மோந்து தாரைபிடித்தது. சாம்பான் அதைப் பின்பற்றிச் சென்றான். படையும் வேட்டையாட்களும் தொடர்ந்தனர்.

வேளாண்குளக்காட்டைக் கடந்துபோய் வீரமலைக் காட்டில்நுழைந்து நெடுந்தூரஞ் சென்றபின், சித்தினி நாய் அங்கே ஒரு பெரும் புதரை யடைந்து நின்று வானத்தை நோக்கி ஊளையிட்டது. அண்ணன்மாரும் வேட்டையாட்களும் சூழ்ந்து நின்று அப்புதரை நீக்கிப் பார்க்கையில் கருமலைபோல் பன்றி கிடந்து உறங்குவதைக் கண்ணுற்றனர், வியப்புற்று, அதையடித்துக்கொல்ல நான்கு யானைகளை ஏவினர். அவ்யானைகள் பன்றியை நைப்பப் புடைத்தலும், தூக்கவெறியில் மலைச்செல் தன்னைக் கடித்ததெனவெண்ணி அப்பன்றி புரண்டு படுத்துக் கண்விழித்து, மலைபிற் சிலையோட உறுமி, மண்டியிட்டெழுந்து, யானைகளின்மேற்சாடிக் கொம்பாற் குத்தியும், பல்லாற் கடித்தும் காலால் உதைத்தும் அவற்றை வெருட்டிற்று. யானைகள் மருண்டு துதிக்கைகளைத் தூக்கிப் பிளிறி நான்கு திசைகளிலும் ஓடின. பன்றி யவ்விடத்தைவிட்டு அப்பாற் சென்றது.

நாய்கள் ஓடி அப்பன்றியை வழிமறித்தன. பன்றி அவற்றின்மேற் பாய்ந்து குடல்சரியச் சிலவற்றைக் குத்திக் கொன்றது. சிலவற்றைக் கடித்துக் கொன்றது. மீந்தநாய்களும் ஆட்களும் பின்னிட்டனர். பன்றி வாலைமுறுக்கி வேடுவர்எல்லையை நோக்கி ஓடிற்று.

'ஓ! ஓ! பன்றி தன்னூருக்கு ஓடுகிறது. விடாதீர்கள்,'' என்று சொல்லி அண்ணன்மார் தாரை பிடித்துத் தொடர்ந்தனர். சித்தினி நாய் வழிகாட்டிற்று.

நெடுந்தூரஞ் சென்றபின் அண்ணன்மார் வேடுவர் எல்லைக்குள் நுழைந்து அப்பன்றி யொருபுதரில் படுத்துக்கிடத்தலைக்கண்டு அதனை அப்பாற் போகவிடாது கொல்லவேண்டுமென்ற துணிவுடன் அதனைச் சூழ்ந்து நின்று நாய்களை ஏவினர். பன்றி புரண்டு படுக்கையில் விலாப்புறத்திற் சிக்குண்டு சில நாய்கள் இறந்தன. நாய்கள் வெருண்டு வெளியே ஓடிவந்து விலகி நின்று குரைத்தன. வேல்வீரர் சிலர் பன்றியை யணுகினர். அது குமுறி யெழுந்து சிலரைக்குத்தியும் சிலரைமிதித்தும் சிலரைக்கடித்தும்கொன்று தீர்த்துப்புதருக்கு வெளியேவந்து சற்றுநின்று சுற்றிப்பார்த்து, சின்னண்ணனைக்கண்டு அவன்பக்கம் திரும்பி 'அடே நீயாண்பிள்ளையானால் வா, போர்செய்ய' என்று சொல்வதுபோல் உறுமிக்குன் றார்ந்ததுபோல் நடந்து அவனை யணுகிற்று. சின்னண்ணனும் உடனே குதிரையை விட்டுப் பாய்ந்து வெறுங்கையோடு அதனை எதிர்த்தான்.

பன்றி சின்னண்ணன்மீது பாய்ந்தது. சின்னண்ணன் அடிக்குத் தப்பி விலகிநின்ற அதன் பின்னங்காலைப் பற்றியிழுத்தான். பன்றி திரும்பிநின்று தலையைக்கவிழ்த்து அவன் கால்களுக்குள் புகுந்து அவனைத் தூக்கி ஆகாயத்தில் எறிந்து அவன் விழுமுன் அவனை நோக்கி ஓடிற்று. சின்னண்ணன் கீழேவீழ்ந்து ஒருநொடியில் எழுந்திருந்து அதன் கொம்புகளைத் தன் கையாற் பற்றி அதனைப் பின்னேதள்ளிச்சென்று ஒருபாறையோடு சேர்த்துத் தாக்கினான். பன்றி கொம்பைத்திமிறித் தன் முன்னங்கால்களால் சின்னண்ணனது தோள்களைப்பற்றிக் கீழே இழுத்தது. அவனும் பன்றியின் கழுத்தில் கைபோட்டுத் தள்ளி, பன்றியோடு கீழே விழுந்தான். பன்றியும் சங்கரும் ஒருவரை யொருவர் கட்டிப் பிடித்துத் தரையிற் புரண்டனர். மீண்டும் இருவரும் எழுந்துநின்று போர் தொடங்கினர்.

இவ்வாறாக நெடுநேரம் போர்புரிந்தும் ஒருவர்க்கொருவர் இளைக்கவில்லை. பன்றியும் சோர்ந்து படுத்தது. சின்னண்ணனும் சோர்ந்து உட்கார்ந்தான்.

அப்பொழுது பெரியண்ணசாமி தம்பியை யணுகி, 'அப்பா, இப்பன்றியை வெறுங்கையால் வெல்வது எளிதன்று. தங்கைக்குக் காவலிருக்கும் நம் மூளிநாயைக் கொண்டுவந்திருந்தால் இதற்குள் அது இதனைக் கொன்றிருக்கும். நான்போய் அந்நாயை அழைத்து வருகிறேன்' என்றான்.

சின்னண்ணன், 'நல்லதண்ணா, நீபோய் மூளியைக் கொண்டுவா. நான் இங்கே இந்தப் பன்றிக்குக் காவலிருக்கிறேன்' என்றான்.

பொன்னர் நால்வர் வீரரோடு குதிரையேறித் தங் காளரண்மனைக்குப் போனார். தங்கை தமையனைக் கண்டு ஓடிவந்து, 'என்ன, அண்ணா? பன்றியைக்கொன்றீர்களா, கூறு கொண்டுவந்தீர்களா?' என்றாள்.

பெரியண்ணன், 'இல்லையம்மா, அதைக் கொல்வதற்கு மூளிநாயை அழைத்துச்செல்ல வந்தேன்,' என்றார்.

பொன்னண்ணசாமி தன்னைப்பற்றிப் பேசியதைப் பக்கத்திலிருந்து கேட்ட மூளிநாய், அண்ணன்மார் வேட்டைக்குப் போகையில் தன்னைப் பொருட்படுத்தவில்லையென்று பிணக்குற்று, உடனே எழுந்து, தங் காளரண்மனையை விடுத்து வெளியே ஒரு சூளையை நாடிச் சென்று, அங்கே உடலைக் குறுக்கிப் படுத்துக் கொண்டது.

தங்கை தாதியரை யனுப்பி நாயைத் தேடச்சொன்னாள். அவர்கள் மூளியைக்கண்டு பலவாறு நல்லவார்த்தை சொல்லி யழைத்தும் அது எழுந்திருக்கவில்லை. இச்செய்தியை யறிந்து தங்கை, 'நானே நேரிற்சென்று அழைத்து வருகிறேன்' என்று சொல்லி, அரண்மனையை விட்டு வெளியே வராதவள் அன்று நாயின் பொருட்டு வெளியேசென்று மூளியைக் கண்டு உபசார வார்த்தை பேசினாள். அது 'வேட்டைக்குப் போகையில் அண்ணன்மார் என்னை மறந்துவிட்டனர். முட்டுண்டானபொழுது என்னை வேண்டுகின்றனர். போ, நான் வரமாட்டேன். பெண்ணுக்குக் காவலிருந்து சீரழிந்தேன்' என்று நைந்து குரைத்துப் பிணங்கிற்று. தங்காள் அதன் காலைப்பிடித்து, 'மூளி, அவர்கள்செய்தது தவறே. இம்முறை அக்குற்றத்தை மன்னித்துப் போய்வா அம்மா, உன்னை யலங்கரித்து வாத்தியத்தோடு அனுப்புகிறேன், வா அம்மா' என்று தேறுதல் சொல்லி, அதை அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோய், ஏழு கொப்பரை தண்ணீர் காயவைத்துக் குளிப்பாட்டிவிட்டுக் குங்குமமும் பூமாலையும் அணிவித்து, கொட்டுமுழக்கோடு அனுப்பிவைத்தாள். பொன்னண்ணர் நாயோடு தம்பியை நாடிச்சென்றார்.

# பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா

[548-வது பக்கத் தொடர்ச்சி]

முதறிவுபெற்று நன்னெறிபற்றி யொழுகுவதற்கான மனப்பாங்குடன் ஒவ்வொருவனும் பிறப்பதில்லை; பெரும் பேதையனாகத்தான் பிறக்கின்றான் போலும்; பிறந்தபின், கல்விப்பயிற்சியாலும் நல்லோர் கூட்டுறவினாலும் தெள்ளிய அறிவும் அறப்பழக்கமும் பெருகி நிலைக்கின்றன. ஆனால், இவைகளைப் பெற்று அநுபவித்தற் காகாமல் பெரும்பாலாரின் ஆயுளிற் பெரும்பாகமும் கழிந்துவிடுகின்றது! ஆதலால், இயற்கைவிதி பற்றி, அதாவது புலச்சேஷ்டைகளுக் குட்பட்டுப் பல்வேறு இச்சைகளால் மாந்தரிற் பெரும்பாலாரும் ஆட்டப்படுகின்றனர்! எனினும், நாள் செல்லச் செல்ல, அநுபவ வாயிலாகச் சிறிது அறிவு உதித்து வளரவே, தன்னலச்சிந்தை விரோதத்வம் வெறுப்பு கோபம் கபடம் திகிலுணர்ச்சி என்பனவாதிகளால்தான் குடிகொள்ளப்பட்டிருக்கும் வரையிலும், மனச் சாந்தியும், உள்ளக் களிப்பும் சுகவாழ்க்கையும் பெற்று இன்புற்றிருக்க முடியாதென்பதையும், மானுடர்க்குள் பரஸ்பர இணக்கமும் தெள்ளறிவு மில்லாமல் சுகித்து வாழமுடியாதென்பதையும், அவ்வவன் இச்சைகளையே ஒவ்வொருவனும் தொடர்ந்துவரும் வரையிலும் மேற்காட்டிய விபரீத விபத்துக்கள் வியாபித்துவருமென்பதையும் உணர்ந்து, மானுடராசியை ஒற்றுமையுடன் வாழச்செய்தற்கும், அவ்வவனுக்கு உரித்தானவைகளை, அல்லது வேண்டியவைகளைச் சுயமுயற்சியினால் பெறுதற்கியலாதபொழுது மற்றவர்கள் உதவியைக்கொண்டுபெற்று இரமித்தற்கும், அங்கத்தினர் ஏவரேனும் முரண்டு பிறர்க்கு இடையூறிடுக்கண்கள் விளைப்பராயின் அவரை ஒறுத்து அடக்குதற்கும், அல்லது சீர்திருத்துதற்கும், தீர்மானித்துச் சங்கங்களையும், அரசு முறைமையையும், நீதிஸ்தலங்களையும், நியாயச் சட்டங்களையும், நாடெங்கும் பரப்ப ஆரம்பிக்கின்றான்.

பெருந்தீங்கு விளையுமென்ற பயத்தினாலோ, அல்லது மிக்க உயரிய நன்மை பெறலாமென்ற நம்பிக்கையினாலோ தூண்டப்படும் பொழுதைத் தவிர்த்து மற்ற சமயங்களில் நன்மை பயப்பவைகளை மாந்தர் சாதாரணமாகக் கைக்கொள்ளாமல் விடுவதில்லை என்பதும், பெருந்தீமைகளைத் தடுத்தற்காகவோ, அல்லது பெருநன்மைகள் பெறுதற்காகவோ அவ்வப்போது உண்டாகும் சிறு தீமைகளும் கஷ்ட நஷ்டங்களும் பொறுக்கப்பட்டு வருகின்றன என்பதும் மானுடரின் பொதுக் குணங்களாவன. அதாவது, நன்மை பெருக்கக்கூடியவைகளினின்று அத்தியுத்தம நன்மை யளிக்கக் கூடியதைத் தெளிந்து பற்றியும், தீமை விளைப்பவைகளினின்று சகித்தற்கியலாத தீமையைத் தெளிந்து விடுத்தும் வருதல் மாந்தர்க்குப் பொதுவான குணதிசயங்களாவன. இயற்கையாகப் பெற்றுள்ள சக்தி யுரிமைகளின் ஒரு சிறிதுபாகத்தை இழக்க நேரிட்டபோதிலும் மேற்சொல்லிய காரணங்களினாற்றான், அதாவது தீமைகளைத் திருத்தியடக்கி அல்லது மட்டுப்படுத்திப் பெரும்பெரும் நன்மைகள் பெற்று இனித்து உயர்ந்து உய்யவேண்டுமென்ற கருத்தினாற்றான், ராஜாங்கம் முதலானவைகளை நிலைநிறுத்தி, அவைகள் மூலமாக ஆக்ஞாபிக்கப்படுபவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க ஒவ்வொருவனும் உடன்படுகின்றான்.

குடிகளால் உவந்து அளிக்கப்பட்ட செல்வாக்கையும் உரிமையையும் ராஜாங்கமானது அக்குடிகளின் பொதுநன்மைக்காகவும் சிறப்புக்காகவும் உபயோகித்தலால, சிற்சில சமயங்களில் தண்டனைகள் விதித்தும் அச்சுறுத்தியும் சிறையகப்படுத்தியும் வருவதினின்று அரசுமுறையைப் பழித்தலும், அருஞ்சுதந்திரத்தைத் துறந்து அடிமைபர்களாகிவிட்டதாகப் பாவித்தலும் தப்பாகும்.

ராஜாங்கம் ஒழுங்குடன நிர்வகிக்கப்படுகின்ற வரையிலும், அதாவது பிரஜைகளின் சுபிக்ஷத்தை முன்னிட்டு அரசுபுரியும் வரையிலும், ஜனங்கள் அதன் கட்டளைக்குப் படிந்தும், தக்கவழிகளில் அதற்கு உதவியும் வருகின்றனர். ஆனால், முறைதப்பி நடக்குமானால், உடனே அதை எதிர்தது, வென்று, அடக்கவோ அல்லது வேருடன் பெயர்த்தெறியவோ வேண்டும். இச்செயல் அதர்மமன்று.

ஒருவனுக்கு உரித்தானதை, அல்லது இன்றியமையாததை அவனிடஞ் சேர்ப்பித்தலே நீதி என்பது. ஒருவனுக்கு உரித்தானதையும் இன்றியமையாததையும்சட்டத்திரிபினால் வஞ்சித்து அவனிடமிருந்து அபகரித்தல் அநீதியாகும். சட்டங்களையும், குற்றங்களின் தன்மையையுங் காரணத்தையும் ஆரத்தீரச் சீர்தூக்கிப் பார்த்து ஒருபாற் கோடாமலும், பகைவர் நட்பினர், செல்வர் மிடியர், யாவரையும் சமமாகப் பாவித்துச் செல்வர்களைப்பார்த்துப பொறாமைகொள்ளாமலும், ஏழைகளை வெறுக்காமலும், நியாயம் புரிதல் நடுவுநிலைமை என்பது.

குழப்பம் - கலகம் - போர் - புரட்சிகளுக்குச் சதாகாலமும் இடங்கொடுத்து, அதிருப்தி - பயம் அவிசுவாசம் - அபக்தி ஆக்கமாகியவைகளை அதிகரிப்பது கொடுங்கோலரசாகும்.

சட்டங்களாலும், தண்டனைகளாலும் ஒருவனுடைய சொல் செயலகளைக் கட்டியடக்கலாம்; ஆனால், தீரவிசாரித்தறியுங் குணத்தையும் மனப்போக்கையும் அவ்வழிகளால் ஒருபொழுதும் அவிக்கமுடியாது.

விசாலநோக்கமும், தீர்ந்து தெளிந்த ஞானமும், உயரிய கருததுக்களும் நிரம்பிய அறிஞர்களை எவ்விததிலாயினும் ஒறுத்தலும் தேசநீக்கஞ் செய்தலும், மாணத்துக் குள்ளாக்குதலும் ஆடாத செயல்களாம்.

உள்ளறிவைச் சுருக்கிட்டு, யாவரும் ஒரேமாதிரி எண்ணிச் செய்து படிந்து நடக்கவேண்டுமென வற்புறுத்தும் ராஜாங்கம் நிலைகுலைந்து அழியும்.

ஜனங்களின பொதுநன்மைக்கும் மேலேற்றத்திற்கும ராஜாங்கத்தின் மேன்மைக்குமே தம் சிந்தனைகளை அறிஞர்வெளியிட்டுவருகின்றனர். ஆதலால் அத்தகையவர்களை யடக்குதற்கு ராஜாங்கம் மேற்காட்டிய கொடிய வழிகள்பற்றி நடக்குமாயின் கலகமெழுப்பி அத்தகைய ராஜாங்கத்தை முறித்துத்தள்ளுதல் தர்மமேயாகும்

மதவிஷயங்களிலும் ததவவிசாரணைகளிலும் ராஜாங்கம் தலையிடக் கூடாது.

ஞானமும் சுசீல நடத்தையு முடைய பெரியோர்களால் வெறுத்து மறுத்து மீறி முறிக்கப்படும் உபயோகமற்ற சட்டங்களையும் அநியாயவிதி விலக்குக்களையும் பெருக்கிப் பாப்பிவருவதைக் காட்டிலும் அவ் வறி

ஞர் உரைப்படி நடந்து, கலகமெழுப்புங் குடிகளைச் சாந்தவழியில் திருப்தியுறச்செய்தல் மிக்கமேலானது.

ராஜாங்கத்தினர்க்குப் பிடித்தமற்ற கொள்கைகளையுடைய சீரியரைக் குற்றவாளிகளுக்குங் கடையராகப் பாவித்துத் தண்டித்தல், சுதேசத்தினின்று வெளிப்படுத்தல், அல்லது கொலைசெய்தல் முதலான மூர்க்கச் செயல்களை விட இழியது வேறொன்றுமில்லை பழிக்குப்பழி தீர்க்கவேண்டுமென்ற சிந்தனையும், அவநம்பிக்கையும், பொய்யும், கபட நடிப்பும், கொலையுமே தான் அச்செயல்களினின்று பெருகிப் பரவும்.

சட்டங்களின் தொகைப்பெருக்கமும் தீமைகளின் செழுமையும் ஒன்றற்கொன்று சார்பாக நிற்பன; அல்லது தீமைகளின் கொடூரங்களும், கொடூரங்களின் வன்மையும் சட்டங்களின் தொகையைத்தான் பற்றுக்கோடாகக் கொண்டு வளர்ந்து வியாபிப்பன போலும்.

# இயந்திரப் பூதம்.

அறுசீ ராசிரிய விருத்தம்

பன்னா றாண்டு முன்னையோர்
பைங்கட் பூதம் மதுரையிற்றன்
முன்னாஞ் செங்நெற் சோற்றுமலை
மொக்கி வையைப் புனலருந்திற்
றென்று மொழிதல் கேட்டுள்ளோ
மிஃதோ ரிறும்பூ தன்றிந்நாள்
அன்னே பூதம் பலவீங்குற்
றற்றே ருணவை முற்றுண்ப (1)

மாயம் வல்ல பூதமிவை
மனிதர்க் குதவி புரிவனபோல்
ஆய வெந்திர வடிவொடுபல்
லட்டூ ழியங்கள் புரிவதற்கே
தேய நெடுந்தூ ரத்திருந்து
சேர்ந்த வீங்குச் செல்வர்நசை
மேய மனத்தம் பொன்சொரிந்து
விருந்தா யேற்பர் விதிவயத்தால். (2)

விருந்தாய் வந்த பொறிப்பூத
மிடியர் தொழிலெல் லாந்தாமே
பொருந்தா வகையாற் செய்தவருண்
புன்கூ ழினிலு மண்போட்ட
வருந்தா திருந்து பைம்பொன்னை
வாரக் கருதும் வன்கண்ணர்
அருந்தார் வருந்தல் கண்டுமிவைக்
கதிகஞ் சலுகை யளித்தாரே (3)

நூற்றுண் போர்தம் வாயினிலு
நெய்துண் போர்தம் நுண்மையிலும்
காற்றைப் போலக் கடும்பரிமாக்
கடவும் பாகர் கையினிலுஞ்
சோற்றின் பொருட்டா னெற்குற்றிச்
சோம்பா திழுத்து மாவரைத்திட்
டேற்ற லின்றி வயிறோம்பு
மேழை வயிற்றும் மண்ணிட்ட. (4)

உண்ணுஞ் சோற்றின் மண்ணிட்டெம்
முயர்நா டலைதத தல்லாமல்
அண்டி யிருந்து தமக்கெண்ணெ
யனலும் விறகு மிடுவோரும்
திண்ணம் பிசகி லீர்த்தவரைச
சிதைப்ப வந்தோ தீயகத்தார்க்
கெண்ண முண்டோ தமர்க்கேனு
மிடையூ றியற்ற திருத்தற்கே. (5)

தம்மோ டேதுந் தொடர்பின்றிச்
சாலை போவார் செவிகண்வாய்
அம்மா மண்ணை வாரியடித்
தயர்ந்தால் வீழ்த்தி மேலேறி
இம்மா நிலத்தி லிவைசெய்கொலைக்
கெல்லை யில்லை யிவையூர்வார்
சும்மா செருக்கிப் பிறர்நோயைச்
சிறிது மறியார் துன்மதியால். (6)

ஓடா தடக்கிச் சிலபூத
முண்ண வுணவு கொடுத்தாலும்
நாடோ றுருகி யிருப்பவர்தந்
நல்ல குருதி வல்லையுணும்
பாடே படுத்துங் கரியபுகை
பரப்பிக் கூச்சல் மிகப்போடும்
காடே யில்லா தொழியமரக்
கட்டை யெல்லாஞ் சுட்டுண்ணும். (7)

பேயே றினர்தம் மதியிழந்து
பிதற்ற லன்றிக் கொடுமைசெயார்
நோயே றிடினு மருந்துண்டு
நோன்மை பெறலா மிப்பூதம்
ஓயா தேறு வார்தொல்லைக்
கொழிவே யில்லை யூர்கெடினும்
ஆயார் செல்வ மேவிரும்பி
யலைப்பார் நன்மை தொலைப்பாரே. (8)

செல்வா மீண்டுஞ் செல்வத்தாற்
செழிக்க வறிஞர் மிகவாடச்
செல்வர் வயிறு புடைபருக்கச்
சிறியோர் வயிறு முதுகொட்டச்
செல்வர் செல்வச் செருக்காற்பஃ
றீமை நெறியிற் செலச்செல்லல்
செல்வ மில்லா ருறச்செய்வ
சீமை யிருந்தீண் டுறுபூதம். (9)

மண்ணும் பூதம் வயிறழுந்த
மலிநீர்ப் பூத நிலைகுலைய
விண்ணும் பூதம் புகைபடிய
மென்காற் பூதம் புன்காலாய்
உண்ணேப் பரப்பக் கெடுப்பவிந்த
வுரனுர் பாழெந் திரப்பூதம்
நண்ணு தோடட லெந்நாளோ
நன்று ளந்நா ளுடீரே. (10)

# பொதிகை நிகண்டு

[556-வது பக்கத் தொடர்ச்சி]

விருத்திதொறுத் தொண்டடிமை சேடர்தொதுத் தொத்
 வீண்கிணகர் தாசர்தொழும் பாஞ்சேட ருசு [தாள்
*ருரித்தர் நண்பர் சிலதர் துணை வோர்தோழ ரிணங்க
 *ரொண்பாங்கர் பேடோடா முன்னிலையாஞ் சிலதி
திருத்திகுழை தண்டிப்பெண் ணுசிபாங்கி தோழி
 சேடிபேர் முன்னிலைதா னேடியே லேளாம்
வருத்துழைய *ரேவலரே பரிசனர்பேர் வினையில்
 வழியினிற்பண் பினிலுரைப்போர் தூதரென்ருெத்
 தனவே. (74)

ஒற்றருசாச் சாரணர்வேய் வேயரென நான்காம்
 ஓர்வெறியாட் டாளன்வே லோன்படிவன் முருகன்
றெற்றுகோ மான்றேவ ராளிபெய ராகுந்
 தேவராட் டியின்பெயரே சாலினியென் ருேதும்
மற்றைவழிச் செல்வோர்பேர் பதிதராம் புதியர்
 வம்பரதி திகளுமா *நொதுமலர்வம் பலரே
துற்றயலோ ரேதிலராங் கம்மியரே தொழுவர்
 தொழிற்செய்வோர் பேர்வியவ னேவுவான் கூற்றே

கூத்தரவி நயர்பொருநர் *ிருத்தர்கண்ணு ளாளர்
 கோடியர்நட் டுவர்நடத்தார் வயிரியர்நா டகர்பேர்
பூத்திநொ டகிநிருத்தி நடனியலங் காரி
 *போர்மையளாங் கூத்திகள்பேர் வந்திகவி கற்ருே
*ஞர்த்தவண்டர் கடிகையர்பே ரியவுள்புக ழோன்பேர்
 அருளன்கா ருண்ணியன்கிரு பாலுதயா லுவின்பேர்
தூர்த்தரிடங் கழிபோகர் பரத்தர்விடர் படிறர்
 தூர்ச்சனர்பல் லுவர்விடமர் காமியர்பேர் விதியே. (76)

விதரண னுதாரிதேயி கொடுப்போன் வியாழன்
 வேளாளன் வள்ளியோன் புரவலனே கேழ்வன்
உதவுவோ னீகையான் றுதாத் தியாகி
 யுபகாரி வள்ளலளி யோன்கொடையா ளியின்பேர்
இதவசனன் பரிசிலான் யாசகனல் கூர்ந்தோன்
 வழைதரித் திரன்றீன னிலம்பாட்ட னேற்போன்
கதியிலா னொற்கனு துலன்மிடியன் கிஞ்சன்
 கலியன்வறி யோனுநுகண் ணுளனிர வலனே. (77)

வலவைவல்லோன் வல்லுநன்மாட் டார்பேர்கூர்ப் பிலன்
 மந்தனு நாகரிகர் சதுரர்கா முகராங் [பேர்
குலமிலர் குலீனரா மழுகிலன்பண் ணறையாங்
 குருடனந்த ராளனுடன் சிதடனுமந் தகன்பேர்
அலிபேடி நபுங்கிஷம்பெண் டகஞ்சண்டங் கிலீப
 மாகுங்கூன் சினகோடி கோணலாங் குஞ்சம்
உலைவில்வா மனஞ்சிந்து றளாகு மூங்கை
 யூமைகுனி மூகையுமாம் வெதிர்செவிடென் றறியே

அறிவிலன்யா தன்பேதை மடனேழை மூகன்
 அஞரிமுதை யண்ணையஞ்ஞை சிதடன்முழு மகனுஞ்
சிறியர்நல மிலர்கயவர் மூடர்கலர் சுமடர்
 தீயர்நசிர் கனிட்டர்கள்வர் கலகர்புல்லர் மூர்க்கர்
பொறியிலர்நூ னவர்சித்தை நபண்டிதர்சிற் றினரே
 புள்ளுவர்கீழ் மையர்மூசுண்டர் பல்லுவ ருலோபர்
நெறியிலர்கல லார்பதகர் முறையிலரோ டதமர்
 நீசர்கையர் தீக்குணரு மீனர்பேர் முடிவே. (79)

முடங்குபங்கு குனிசிலைதவு முடவர் பேராகு
 முழுச்சவனர் வேதிகர் நிசாதர்வஞ்சர் பேராங்
கடும்படிறர் தீனர்கர விடர்திருடர் சோரர்
 கள்வர்புறை யோர்கபடர் தேசர்கள்ளர் பேராம்
துடர்ந்தவர்புல் லுவர்வேட்டர் காதலர் சினேகர் [தோ
 சூழ்நல்லோ ரார்வலரொன் றினர்நயந்தோர் விழைந்
ருடன்பலசந்தோர் நள்ளுநர்சேர்ந் தார்பெட்டார் கூட்டர்
 ஒட்டினர்வல் லுநர்புரிந்தோர் மித்திரர் மேவினரே.

மேவலர்சார் பிலராரிகள் பார்கெலிஞர் நேரார்
 வேண்டார்பற் றூர்பகைவர் கருதலர்வில் லங்கர்
தாவிகலர் இட்டலர்கூ டலர்சேரா ரெண்ணுர்
 தரியார்செற் றூர்நிகரா ரடையலார் திருந்தார்
எவுவணங் காமரர் பொருநருள்ளார் நள்ளார்
 எதிர்ந்தார்வெய் யோரிரிஞ ரமடர்மன்னு ரொன்னார்
வாவுதெவ்வ ரமித்திரரொட் டார்மருவார் மானர்
 மாற்றலர்போற் றலர்சேயர் சூரர்வட்கார் கேளார்
தூவுமின்னு தார்பூணைந்தா ரண்டர்விட்டார் நண்ணுர்
 துன்னுர்மண் டினரொல்லார் செறுநருஞ் சத்துருவே.

துரிதமில்லாக் கேள்குடும்பஞ் சார்புசூழ் நட்டார்
 துணைகூளி யிகுளைநட்புக் கிளைவிருந்து கடம்ப
பரிசனம்பா சனந்துடர்மித் திரருற்ருேர் கேளிர்
 பற்றுறவு பந்தநண்பு தமரொக்கல் சுற்றம்
உரியர்நள்ளி யிருபத்தே ழுறவின்முறைப் பேரா
 மூட்பீதி சவலைபயத் தான்பீருப் பீதன்
வெருவிசகி தன்பிளிற னச்ச முற்ருேன் பேராம்
 விளம்புநக்க னென்பநிரு வாணிபாற் படுமே. (82)

படர்மறவர் வாளுழவர் மள்ளர்கதர் வயவர்
 படைத்தலைவர் பூரணர்கூ ளியர்மிண்டர் துண்டர்
திடர்வியவர் பூதர்விற லோர்மீளி வண்டர்
 திறலோரண் ணியரேசன்னத்தரா யுத்தர்
அடுமூவேழ் வீரர்பெயர் *காதகன் காருகனே [கணிகை
 யருந்துதன்கா லனுங்கொலைஞர் பேர்பொருட்பெண்
துடரும்விலை மகள்வேசி பெறுவகொள்வாள் பரத்தை
 சூளைபய னிலிதாசி வரைவில்பெண்பேர் குறியே (83)

குறவர்கா னவர்புனவர் பழிஞர்வெற்பர் குழுவர்
 குன்றுவரு மிறவுளருங் குறிஞ்சியர்பே ரதிற்பெண்
சிறுகுறத்தி கொடிச்சியாங் கானகநா டன்பேர்
 சிலம்பன்வெற்பன் பொருப்பனும் புள்ளுவரோடெயினர்
மறவர்தெறும் பினரிறுக்கர் பாலையர்பே ரெயிற்றி
 மறத்திபல்லி பெண்காளை *விடலையு மீளியுங்கோப்
பொறையிலர் விரோதர்கா தகர்கோபர் வன்பர்
 புளிஞர்வெ சரர்சவரர் பாலமூர்த் திகளே. (34)

திநமெயினர் பையர்பா தகர்கோளர் மறவர்
 சில்லர்கொலை ஞோர்காடர் முருடர்வேட் டுவரே
பகர்வேடர் மாகுலர் கிராதரிவை குறிஞ்சி
 பாலைமக்கட் பொதுப்பேராம் பொதுவர் கோவிந்தர்
சுகவமுத ரண்டரா வலர்விந்தர் பாலர்
 தொறுவர்கோ வலர்குடவர் கோபால ராயர் [யோ
இகழ்மொழியர் பொறையர்கொச்சையோர்முல்லைத்திணை
 ரிடையர்பதி னேழுநடு நிலத்தினர் பேர்ப்பொதுவே.

பொதுவிநெய்யின் முடைச்சிநடு நிலத்தியொடு குடத்தி
 புன்மொழிச்சி யாச்சிதொறு வியுமிடைச்சி நாம
மதினிறைவன் குறும்பொறைநா டன்கோன்கா னுடன்
 அண்ணலுந்தோன் றலுமாகுந் தொழுவர்மள்ளர் களம

* நிருத்தர் (பி-ம்)
* ரெண்பாங்கர் (பி-ம்)
* ரேவல்பரி (பி-ம்)
* நொதுமலரம் (பி-ம்)
* போர்மைகளாங் (பி-ம்)
* ஞர்த்தர் (பி-ம்)
* காத்தன் (பி-ம்)
* விடலை (பி-ம்)

ருதகர்கழ னியர்விளைஞர் பண்ணையர் கம்பளரே
யுழவர்கடை ஞோர்களைஞர் மருதநிலத் தவர்பேர்
நதியுறுகா லாட்டிகடை சியர்கிழத்தி யுழத்தி
நன்மகிழ்நன் கிழவனூ ரன்றலைவன் பேரே. (86)

தலைநுளையர் பரதர்பர தவர்திமில ரளவர்
சலவாணர் கலவர்மரக் கலர்கழியர் கடலர்
வலைஞரிவை நெய்தனிலத் தார்நாமம் பரத்தி
வலைச்சிகடற் பெண்குழைச்சி நுளைச்சிகுரத் தியுமே
யலைநிலப்பெண் ணும்புலம்பன் றுறைவன்மெல்லன் சேர்ப்
அரியகொண்கனைம்பேர்நெய்தற்றலைவன் பேராம்[பன்
விலைசெயுமுப் பளத்தார்க்கே யளமரெனச் சாற்றும்
வேண்டியமன் பதைபஞ்ஞீ லிரண்டு மக்கட் பரப்பே.

மக்கண்மா னிடர்மாந்தர் யாண்டையர்மன் னிலத்தார்
மனிதர்மா னவர்மாக்கள் சனருலகர் மனிடர்
தக்கமனுப் பன்னிரண்டு நரர்பேரா ஞாதி
தாயத்தார் குடிச்சுற்ற மூதாதை பாட்டன்
புக்கபிதா மகன்பேரன் பெரியோன் விதாதாப்
போற்றன்பேர் தந்தைபிதாத் தாதையப்ப னையன்
தொக்கபிதி ரீன்றானம் மானத்தன் பயந்தான்
றெழுமச்சன் பதினொன்றுந் தகப்பன்பே ரனத்தே.

அன்னையனை யாய்தல்லி மோய்தள்ளை யீன்றாள்
அம்மைவயின் பொறையவ்வை யாயிபெற்றாள் புனி
தன்னைபயந் தாள்மாதா வம்மனைபன் னேழுந் [ற்றாய்
தாய்பேர்தவ் வையுமாகும் வளர்த்ததாய் செவிலி
மன்னுகைத்தாய் கோடாய்பா ராட்டுந்தாய் பிற்றாய்
மாமனம்மான் மாதுலனு மாமியத்தை யாகு [ணி
முன்னுதித்தாள் சேட்டைதவ்வை தன்னையக்கை யண்
மூத்தாள்பே ரத்தையக்கா டமக்கையுந் தங்கிடுமே (89)

தங்கைபே ரிளையாள்கை யாங்கிபின்னை பின்னுஞ்
சட்டகனுஞ் சகலனுமோர் குடியினிற் கொண்டவனும்
புங்கவன்மூத் தோனையன் சேட்டனண்ணு வண்ணன்
பொறையன்முன்னோன் றம்முன்னொன் பான்றமைய
மங்கனுட்ட னனிச்சனே பின்னிளவல் பின்னோ[ன்பேரா
னுதரஞ்சேர் தம்பியென்றேயிளையோன் பேராறும்
செங்கனிவாய் மானனையாய் சோதரரே துணைவர்
சேர்சகோ தரருமுடன் பிறந்தவர்பேர்க் கணிப்பே (90)

கணவன்வரன் கொழுநன்வேட் டோனுரியன் கேள்வன்
கண்டன்கா தலன்கொண்கன் பதிபிரான் றலைவன்
மணமகன் பிரீதியன்ம ணாளனண்பன் காந்தன்
மணவாளன் றவன்மகிழ்நன் வல்லவனே பத்தா
துணைவனு யகன்பேரில் லாள்காந்தை தேவி
துணைவிகா தலிமனையிற் களத்தாம் பாரி
யணைமனையாள் வாழ்க்கைவிருந் தூர்மைமண வாட்டி
யைகுடும்பி பன்னிமண மகளாா நாயகியே. (91)

அகவிளக்கம் பொருள்செம்மல் குட்டன்முளை யிளவல்
அருளேயன் சிறுவன்கா தலன்மதலை தோன்றல்
மகன்மருமான் சுதன்பாலன் சந்ததிகா லெச்சம்
மைந்தன்மழ வோன்சேடன் புத்திரன்சேய் தனையன்
புகழ்வழிநந் தனன்புதல்வன் குமரனு லேழாம்
புதல்விசுதை புத்திரி குமாரியையை பாலை
நகுசிறுவி தனையைசெல்வி பந்தனையே குட்டி
நந்தனையே மதிப்புமகள் பெண்பிள்ளைக் கியம்பே. (92)

பிள்ளைசிறார் முளைகுழவி யெச்சமகார் மகவு
பிஞ்சுகுஞ்சு குழந்தையிரு மக்களுக்கும் பொதுப்பேர்
விள்ளுகைமை பெறுமபிள்ளை கோளகன் கோளிலியாம்
வேற்றோர்க்குப் பெறும்பிள்ளை குண்டகனுங் கன்னிக்
குள்ளமகன் கானீன னுற்குலத்தி னுண்பெண்
ணுயர்பிழிபாய்க் கலந்துபெற்ற பிள்ளையனு லோமன்
றெள்ளுமா ணிழிபும்பெண் ணுயர்புமாய்ப் பெற்ற
சேய்பிறிதி லோமனெனச் செப்பினர் முன்னோரே.

முன்னுரைத்த வனுலோம பிறிதிலோ மரிலே
முறைவழா தீன்றபிள்ளை பேரந்த ராளன்
பின்னதின்மா றிப்பிறந்த சேய்விராத் தியனும்
பிறங்கடையே மருகன்மரு மானுன்கு பேரு
மன்னியமின் மருமகன்பேர் காளைமகன் மாந்த
னுடவன்பூ மான்குமர னவன்புருட னுரே
வின்னவுமைந் தனுமாண்பாற் பொதுப்பேரா நம்பி
யென்பதாண் சிறப்புநங்கை பெண்சிறப்பாந் தெரியே.

தெரிவைமா னினிநாரி மகள்வனிதை மாது
சிறுமியிளம் பிடிமடந்தை தையல்பிணா மகடூஉ
வரிவைமட வரலணங்கு பேதைமங்கை பெதும்பை
யாடவள்கா ரிகையாட்டி பெண்டுநல்லாள் காந்தை
பிரியைமா யோண்மனிதி நங்கை நாகரிகை
பேடுமட வாள்பேதி வஞ்சனியே விருப்பி
வரிசையினங் கனைதோகை யாறாறும் பெண்பேர்
வாழுவதி தம்பதியு மாண்பெண் ணிரட்டையரே. (95)

இரவிநங்கை நாயகிதாய் சாமியத்தை யடிக
ளிசமாட்டி தலைவியையை கோமாள் பிராட்டி
யரசியர சாளிறைவி கண்ணாட்டி குரத்தி
யப்பதினேழ் முதல்விபேர் கன்னிகும ரியின்பேர்
திரள்விதவை யமங்கலிநா லிலிகைமை கயினி
தீர்ந்தகல னழிமகள்பேர் மைமைவந்தி யிரண்டு
முரமலடி பேர்வண்ண மகள்கோலஞ் செய்வாட்
குரியபெயர் விருத்தைமூப் பள்ளவள்பேர்ச் சிறப்பே.

சிறுபேதை பெதும்பைமங்கை மடந்தையே யரிவை
தெரிவைபே ரிளம்பெண்ணேழ் பருவமின்னா ரிவர்க்கே
யறுமேழ்பன் னொன்றுபதின் மூன்றே பத்தொன்பா
னையைந்து மூப்பானொன் றெண்ணைந்தும வயதாம்
குறளிகுண்டங் கூனிதுட்டை யொடுபெடிவி தூங்கி
குட்டனியோ டசதியெட்டுந் தொழுத்தைபேர் கூறும்
வெறுமோரை பொய்தல்பண்ணை யவையாயம் பெண்கள்
விளையாட்டுக் கெடவரலு மாமதற்குத் தானே. (97)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—6. கரன் வதைப் படலம்.

[554-வது பக்கத் தொடர்ச்சி]

புரிவது போரோ சிறுவிளை யாட்டோ.

படைத்தலைவர் பதினல்வர் படியிடைத்தம் சிரமுருத் தொழிந்தபின் திரிசிரா வென்னுமவ் வெந்திற லரக்கன் தன் சேனையோடு மண்டிவந்து இராமனைத் தாக்கினன். போரின்கடுமை பெரியதேனும் முடியும் வகை யொன்றே. அரக்கர்களோ,

அற்றன சிரமென வறித றேற்றலர்
கொற்றவெஞ் சிலைச்சரங் கோத்து வாங்குவார்
இற்றவ ரிறுதவ ரெழுந்து விண்ணினைப்
பற்றின மழையெனப் படைவ ழங்குவார்

[தலையறுபட்டவர்கள், தங்கள் தலைகள் அறுபட்டுப் போயினவென்பதையும் அறியாதவர்களாகி வெற்றி பொருந்திய தம் வில்லில் அம்புகளைத் தொடுத்து வளைப்பார். தலை அறுபடாதவர்கள் எழுந்து ஆகாயத்தைச்சூழ்ந்துகொண்டு மேகம்போல ஆயுதங்களை வீசுவார்]

ஆயினும் என்!

கைக்கரி யன்னவன் பகழி கண்டகர்
மெய்க்குலம் வேரொடுந் துணித்து வீழ்த்தின
மைக்கரு மனத்தொரு வஞ்சன் மாண்பிலன்
பொய்க்கரி கூறிய கொடுஞ்சொல் போன்றவே

[துதிக்கையுடைய யானையைப்போன்ற இராமனுடைய அம்புகள், கொடிய அரக்கர்களின் உடல்களை அடியோடு அறுத்துத் தள்ளின. இதனால் அவ்வம்புகள், மாண்பு இல்லாதவனாகிய மைபோன்ற கரிய மனமுடைய வஞ்சகன் ஒருவன் பொய்ச்சாட்சி சொன்ன கொடிய சொற்களை ஒத்தன]

குலத்தினை வேரொடுந் தொலைத்த அத்தன்மையில் மட்டுமே இராமபாணம் பொய்க்கரி கூறிய உரையை ஒத்தது. முன் தாடகையின்மீது இராகவன் எய்த பாணத்தை, "சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம்" என்று குறித்தனர் கம்பர். வைத்த குறி பிழைபாத வாய்மையாலும் வெல்கின்ற வேகத்தாலும் எய்கின்ற இராமனது சொற்களையே ஒக்குமச் சரங்கள், இலக்காகி ஏற்றுண்ட கண்டகர்தமை மூலநாசம் பெற முடிக்குந் திறத்தினில் பொய்க்கரி புகன்ற சொற்களைப் போன்றன. எனினும் பொய்க்கரிக்கும் இராமன்றன் தூய புட்டிலிற் றோய்ந்த அம்பிற்கும் ஓர் வேற்றுமை உணர்வதற்குளது. மெய்ம்மைபோல் என்றுந் தேய்வுறாத் தூணியினின்று வந்துள நிசாதக் கணைகள் இவை. பொய்வளரும் நெஞ்சினர்களாயினும் தம்மிற் பிறந்த பொய்ம்மையாலேயே அழிவதைக் காட்டினும், இராகவனையே தூயோர் தூக்கும் மெய்ம்மையால் மாய்வதில் ஊதியங் காணலாமென்பதைக் கம்பர் பெருமான், தனக்கேயுரியவத் தனிப்பெருங்காட்சியுடன் நுனித்துநோக்கி, மண்ணவர் மயக்கம் நீங்கி மாபெருங் கதியைச் சேருமாறு,

அஞ்சிறை யறுபத மடைந்த கீடத்தைத்
தஞ்செனத் தன்மய மாக்குந் தன்மைபோல்
வஞ்சகத் தரக்கரை வளைத்து வள்ளறன்
செஞ்சரத் தூய்மையாற் றேவ ராக்கினான்

[அழகிய சிறகுகளையுடைய குளவியானது, தன்னிடம் அடைந்த புழுவைக் கொட்டிக் கொட்டித் தன்னைப்போலவே மாற்றிவிடுந் தன்மைபோல, வள்ளலாகிய இராமன் வஞ்சனையுடைய அரக்கர்களை வளைத்துக்கொண்டு, செவ்விய தன் அம்புகளின் தூய்மையால் அவர்களைத் தேவர்களாகும்படி செய்தான்]

என இச்செவ்வியில் எடுத்துக் காட்டுகின்றாராகின்றார். பிரமரகீட நியாயம் என்னுமிது உலகறிந்ததொன்று. உயிர்நூலறிஞர் இததனையும் பொய் யென்று இந்நாள் கூறுவர். குளவி இட்ட முட்டை பொரித்து வெளிவந்த குஞ்சிற்கு இப்புழு இரையாயிற்றேயன்றிப் புழுவே குளவியாய் மாறியதில்லை என்றிவர் உரைப்பது நிகழ்ச்சி முறையளவில் உண்மையே எனினும் உய்யுநெறியுணராமல் அவலமாதற்கே அடிகோலிய வாழ்க்கையர் தாம் இவ்வுண்மையை ஆராயத் தலைப்படுவார். இத்தகைய சாத்திர நூலாராய்ச்சியாளர்களை, ஆங்கிலகவி வில்லியம் ஒர்ட்ஸ்வோர்த் என்பவர், "Men who would botanise over their mother s grave" என்றிகழ்வது எல்லாப்படியாலுந் தக்கதே. இலக்கிய எல்லையினுள் இப்பொய்படு ஆராய்ச்சிகளைக் கொணர்வதின்றி இச்செய்யுளின் பெருமையைச் சிந்திப்போர் மனமெல்லாஞ் சிறப்படையும். நினைவின் மெய்ம்மையாலன்றி நிகழ்ச்சியின் உண்மையால் உய்வதன்றிவ்வுலகம். தீயோர் உறவினும் நல்லோர் பகையினால் நன்மையுண்டாம். எம்பிரான் அம்புபட அரக்கரனைவரும் தேவரே யாயினார். இதனையே மனத்துட்கொள்வார் பண்பட்ட உள்ளமுடைய பெரியோர். இராகவன் ஆற்றலைப்பற்றியும் இங்கு நினைக்கவேண்டா. புவனம் ஆக்கி மற்றவை அகிலமுந் மணிவயிற்றடக்கிக் காக்குமொருவனுக்கு அரக்கர்சிலரை வென்றழித்தல் ஒரு பொருளன்று. அதுவுமன்றி, ஒருசார் கொல்லென்றுரைத்து மறுசார் கொலையுண்டு நிற்கும் தத்துவனாகிய இவனது அதிரேகமாயையை யாவரறிவார்? எம்பெருமான் செஞ்சரத் தூய்மையால் தேவர்களாய அவ்வரக்கரைக்கண்டே நாம் உவக்கின்றோம். இதனால் கவியரசு கம்பர் தன் சித்திரக்கலையை வீசிப் போரின் கொடுமையை எல்லாம் மறைத்துவிடுகின்றார். கலையுணர்வின் கலங்காத நுண்மையை, மறைபொருளாக்கி ஒன்றினை அது மாற்றுந்திறத்தில் காணல்வேண்டும். நிருதரெல்லா மருஞ்சமரம் புரிந்தாரானாலும் இராமன் இழைத்ததெல்லாம் தனக்குரிய கருணைமிகுந்த விளையாட்டொழிய வேறன்று என்னும் எண்ணத்தை எழுப்பித்தரும் வகையில் கம்பர் இக்களத்தினைக் கையாளுந் திறம் அமைந்திருக்கின்றது. விளையாட்டினுள் மாய்ந்தழிதல் தக்கதன்றாதலின், அரக்கரை அவன் தேவராக்கினான் எனச்செப்புகின்றனர். தேவரென்றிவர் ஆயது, அடைந்த பதவியினால் மாத்திரமல்லாமல், மனத்தின் தன்மையாலும் மாறினர் எனக் காட்டுவார்போல்,

தெரிகணை மூழ்கலிற் றிறந்த மார்பினர்
இருவினை கடந்துபோ யும்பரெய்தினார்
நிருதர்தம் பெரும்படை நெடிது நின்றவ
னொருவனென் றுள்ளத்தி னுலைவுற்றாரோ

[இராமன் தெரிந்து எய்த அம்புகள் தைத்தலால் பிளந்த மார்பையுடையவர்களாய்த் தம் பெரிய தீவினையைக் கடந்து சென்று மேலுலகத்தை அடைந்த அரக்கர்கள், "இந்த இராக்ஷஸ சேனையோ மிகப்பெரிது, அதனை எதிர்த்து நிற்பவன் ஒருவன்," என்பதை நோக்கி இராமன்பால் பரிவினால் தம் மனத்தில் அச்சமடைந்து வருந்தியவராயினார்]

என்றோர் பாசுரத்தில் இனிது இயம்புகின்றார். குலசேகரப் பெருமாளை உலைவித்த வோர் நிலைமையே இன்றிவ்வரக்கரை உலையச்செய்யும் நுண்மை ஓர்ந்துகொள்ளற்குரியது. அரக்கரோ இரங்கினார்; மற்றவ் விரக்கமே கடவுட்டன்மை.

தேவராய் உம்பர் நின்ற அரக்கர்தாம் கண்டகாட்சிகள் பல. அவர் கண்களுக்கு, தாம் மாய்ந்தழிந்த வெங்களம் விளையாட்டிடமாகவே தோன்றியது. நகைச்சுவை துய்த்தற்குரிய நாடக அரங்கென அச்சமரபூமியைக் கலைதேர்ந்த கம்பர் மிக வெளிதில் திரித்துவிடுகின்றார்:—

சண்டவெங் கடுங்கணை தடியத் தாஞ்சில
திண்டிறல் வளையெயிற் றரக்கர் தேவராய்
வண்டுழல் புரிகுழன் மடந்தை மாரொடுங்
கண்டனர் தம்முடைக் கவந்த நாடகம்

[வேகமுடைய இராமபாணங்கள் கொல்வதால், வலிய வளைந்த பற்களையுடைய சில அரக்கர் தேவர்களாகி, வண்டுகள் மொய்க்கும் சுருண்ட கூந்தலினையுடைய தேவகன்னிகைகளுடன்கூடி வீற்றிருந்து, தங்களுடைய தலையற்ற உடல்கள் நாடகமாடுவதைக் கண்டிருந்தனர்]

என்னுங்கால் போர்க்களத்திற்குரிய கொடிய நினைவெல்லாம் நம் மனத்தினின்று பறந்துபோய், தன்னுடைய தலையிழந்த உடலின் நாடகத்தைத் தானே கண்டு தன் மடந்தையோடுவக்கும் அரக்கனை நாம் கண்டு நகுகின்றவராகின்றோம். இவ்வரிய நாடகத்தை மாத்திரம் பார்த்திருந்தார் அங்கிருந்தார்; அதனைப் பார்ப்பவர் உள்பட நமக்கோர் நாடகக்காட்சியாகின்றதிது. மற்றும்,

ஆய்வளை மகளிரோ டமர ரீட்டத்தர்
தூயவெங் கடுங்கணை துணிதத தங்கடோள்
பேயொரு தலைகொளப் பிணங்கி வாய்களின்
நாயொரு தலைகொள நகையுற் றார்சிலர்

[சில அரக்கர் தேவர்கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகி, ஆய்ந்தெடுத்த வளையல்களையணிந்த தேவகன்னிகைகளுடன் தூய்மையான வெவ்விய வேகமுடைய இராமபாணங்களால் துண்டிக்கப்பட்ட தங்கள் தோள்களைப் பேய்கள் ஒரு பக்கத்தில் கௌவிக்கொள்ள, அதற்கு மாறாக நாய்கள் மற்றொரு பக்கத்தில் வாய்களால் கௌவியிழுக்கக்கண்டு சிரித்தனர்]

தூயவரம் வீரன் நற் சரங்கள் பட்டதால் பெற்றவோர் பெறற்கரும் பாக்கியம் இது. தன்னின் நாடகத்தினைத் தானே தெரியக்காண்பார் யாவரே. நம்மினின்று நம்மையே வேறாக்கிக்கொண்டு பெரியதோர் உயரத்தில் நின்று உற்று நோக்கினால் காணவல்ல காட்சி பெரும்பாலும் இதனையே ஒக்கும். தலையிழந் தாடினாலென், அத் தலையினுள்ளிருக்கும் மதியிழந்து ஆடினாலென்! துணித்த தோள்களை நாயும் பேயும் தமது தமதென்று மாறுபடப் பற்றியிழுத்தாலென், உடலுடன் பிணைத்த தோள்களைச் சிலர் தமக்குத் தமக்கென்று பற்றி இழுத்தாலென்! அந்தத்தில் இரண்டும் ஒன்றேயாம். மனிதன் தன்னின்று தானே வேறாகித் தன்னையே நோக்குவானெனின் பெரும்பாலுந் தன் செய்கைகளெல்லாம் தன்னுடைய கவந்த நாடகமாகவே தோன்றக் காண்பான்; தன்னுடன் பயில்வார் செய்தியும், இருதலையுந் தன்னைக் கௌவியுண்ண இழுக்கும் தன்மையாவதுந் தெரியவரும். இது தெரிந்தவர் தேவராயினார். கம்பர் இங்குக் கூறுவதும் இன்னதே.

உம்பர்நின் றுற்றுநோக்குவார்க்கு நாடகமும் நகைச்சுவையும் இவ்வண்ணம் அமைந்ததேனும், மாண்டவர் தொகைக்கும் பெருகிய குருதிக்குங் குறைவில்லை

வலங்கொள்போர் மானிடம் வலிந்து கொன்றமை
அலங்கல்வே லிராவணற் கறிவிப் பாமெனச்
சலங்கொள்போ ரரக்கர்த முருக்க டாங்கின
இலங்கையி னுற்றவக் குருதி யாறரோ

[வலிமையுடைய போர்வல்ல ஒரு மனிதன் அரக்கர் பலரை வலிந்துகொன்ற செய்தியை, வெற்றிமாலையணிந்த வேலாயுதத்தை ஏந்திய இராவணனுக்குத் தெரிவிப்போம் என்று எண்ணி, அங்கு உண்டான இரத்தஆறுகள், பகையுடைய போர்செய்யும் அரக்கர்களின் உடல்களைத் தாங்கினவைகளாய் இலங்கையைச் சென்று சேர்ந்தன]

செய்திசொல்லச் சென்றவக் குருதி அதற்குரிய சான்றினை உடன்கொண்டேகி இராவணனுக் கெதிர் கிடத்தக் கருதிய இது சாலத் தகுந்ததே.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
ச்யாவனப்ராச
ஜீவஸுதா
பாதாமி லேகியம்
தந்வந்தரி லேகியம்

தைலங்கள்:
அமிர்தாமலக
பிருங்காமலக
ஸுகுமார
ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)
காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)
ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)
IDL ச்யாவனப்ராசா IDL பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மெடிகேடட்-டப்பி
(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

# கலாநிலயச் சொல்லூடாட்டம். 5.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | | 4 | 5 | 6 | |
| | ■ | 7 | 8 | | ■ | 9 | | | ■ |
| 10 | 11 | ■ | 12 | | | | | ■ | 13 |
| ■ | 14 | 15 | | | ■ | | ■ | 16 | |
| 17 | | | | ■ | 18 | | | | |
| 19 | | | ■ | 20 | | | ■ | | ■ |
| | ■ | 21 | 22 | | | ■ | 23 | ■ | 24 |
| ■ | 25 | ■ | 26 | | | 27 | | | |
| 28 | | 29 | | ■ | 30 | | | ■ | |
| 31 | | | ■ | 32 | | ■ | 33 | | ■ |

**இடம்—வலம்**

1. சூரியன்.
3. யசோதையின் கணவன்.
7. தோணி.
9. கடல்.
10. மலையிலுள்ள முழை.
12. பிரகாசித்தல்.
14. குள்ளன்.
16. துறக்க.
17. காமநோய்
18. முருகன்.
19. வாட.
20. யாழ்.
21. இருள்.
26. ஓர் அரக்கன்.
28. அரசன்.
30. கப்பல்.
31. வேசி.
32. நீர்.
33. துவாரம்.

**மேல்—கீழ்**

1. பாகம்.
2. காசிபன் மனைவி.
3. நல்லவன்.
4. இராவணன்.
5. சூழ்தல்.
6. பட்டினம்.
8. ஓர் இராசி.
11. வாழ்த்துமொழி.
13. அறிவில்லாதவன்.
15. இந்திரன்.
16. ஓர் வருடம்.
17. ஓர் நகரம்.
18. ஓர் பிரபந்தம்.
20. கை.
22. அதிகம்.
23. வண்டு.
24. ஓர் மரம்.
25. பூமி.
27. ஒன்றுசேர்.
28. சிரிக்க.
29. விரோதம்.

**கடைசிநாள் :—1932 வருடம், ஆகஸ்ட் மாதம் 29 தேதி.**

பரிசு:—கலாநிலயம், 1928, 1930, 1931, ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப் லெதர் - கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணாவுக்குக் காலணாத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணா பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்குமட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் அவ்வவ் முறை பரிசு பெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும். இதுகாறும் நேரியவிடைகள் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்களும் இப் பரிசிற்கு உரியவராவார்.

5 சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றிய எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை, மானேஜர், கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை,
என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

## கலாநிலயச் சொல்லூடாட்டம் நம்பர் 4. விடையும் முடிவும்.

நேரான விடை :—

இடம் - வலம் :—1. அமராவதி; 5. சதி; 7. கரா; 8. சிங்காதனம்; 10. வம்பு; 12. கன்மம்; 13. துவள்; 16. அமைதி; 17. கூன்மதி; 19. மனு, அல்லது மநு; 20. தமர்; 22. கல்; 23. காமவல்லி; 25. புள்; 26. நன்றி; 27. தந்து; 29. துகில்; 30. வைகறை.

மேல் - கீழ் :—1. அகவல்; 2. மராம்; 3. வசி; 4. திங்கள்; 5. சதமகன்; 6. தினம்; 9. கான்; 11. புதுமை; 14. வதிதல்; 15. மதில்; 16. அனுமன், அல்லது அநுமன்; 17. கூர்; 18. மகள்; 19. மகாநதி; 21. மலிதல்; 24. வறிது; 25. புதுவை; 28. கறை.

நேரிய விடை அனுப்பியவர் :—அரவக் குறிச்சி S. K. பிச்செமுத்து ராஜா. S. சந்தான கோபால ஐயர், கண்டாச்சிபுரம். R. திருமலைஜக்கையா, கோம்பை. V. S. கோவிந்தகிருஷ்ணன், கோம்பை. A. சுருளியாண்டி, கோம்பை. S.N. இராமசுவாமி ஐயங்கார், சங்கரிதுருக்கம். சி.கந்தையா, மன்னார். V.சரவணமுத்து, மன்னார். S.பட்டம்மாள், மைலாப்பூர். C. பழனிக் குமரன், ஆலமரத்துப் பட்டி.V. A. பர்னாண்டோ, கொழும்பு. V. இராஜாராமன ஆலமரத்துப்பட்டி. R. தியாகராஜன், காயாமொழி. V. S. இராமசுவாமி கௌட, கோம்பை. பி. நா. பழ. நாகப்பச் செட்டியார், வேந்தன்பட்டி, T. பழனிக்குமார், தம்மிநாயக்கன் பட்டி, C. திருஞானசம்பந்தன், உக்கிரன்கோட்டை, S. முத்தையா, மேல இலந்தைக்குளம். V. R. இராமாநுஜ முதலியார், வீராம்பியம். K. இராஜகோபால், தேவாரம். S. கந்தையா, பேராதனை. S. M. சொக்கலிங்கம், கொழும்பு. O. E. ஸையத் இஸ்மேய்ல், மாந்தலே. V. முத்துக் குமாரசுவாமி செட்டியார், சென்னை; K. வேலுப்பிள்ளை, பேராதனை; முத்து K. M. M. அருணசலம் செட்டியார், தேவகோட்டை. K. M. N. N. சுப்பையா செட்டியார், தேவகோட்டை. U. N. இராமசுவாமி நாயுடு, உடுமலைப் பேட்டை; K. A. S. பத்மநாப முதலியார், திருப்பத்தூர்.

பரிசுபெற்றவர் :—V. முத்துக்குமாரசுவாமி செட்டியார், சென்னை.

## கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முடவனுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3 நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S நடராஜபிள்ளை, B A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N தணிகாசல முதலியார், B .A. B. L ) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, நல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

**மானத சாத்திரம்:**—(T P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவசரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேணடும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

# வர்த்தமானம்

அயர்லாந்தும் இங்கிலாந்தும்:—பிரிட்டனில் ஏற்பட்டுள பொருளாதார நெருக்கினால் பார்லிமெண்டார் அயர்லாந்திலிருந்துவரும் சாமான்களின்மீது புதியவரி போடவேண்டி, ஜூலை முதலில் கூடிய பார்லிமெண்டுக் கூட்டத்தில் ஒரு மசோதாக் கொண்டுவரப்பட்டது. இம்மசோதாவும் அவசரமாகநிறைவேறியது. இந்தவரியை அயர்லாந்துக் குடியரசுக்கட்சியின் தலைவரான டி. வாலரா மறுத்தார். இத்தகராறு தீர்வதற்கு ஒரு மத்தியஸ்தம் பேசப்பெற்றது. டி. வாலரா சர்வதேசப்பிரதிநிதிகளைக்கொண்ட மத்தியஸ்தசபை ஏற்படுத்தவேண்டுமென்றும் பிரிட்டனிலிருக்கும் எவரும் மத்தியஸ்தசபையில் நியமனம் பெறலாகாதென்றும் வற்புறுத்திக் கூறுகின்றார். பிரிட்டனின் வரவுசெலவுத் திட்டத்தில் 50 லட்சம் பவுன் துண்டுவிழுந்துளது. அத்தொகை சம்பாதிக்கப்படவேண்டும். இன்னதற்கே இவ்வரி விதிக்க முயலப்படுகின்றது. இம்மசோதா இரண்டாவது முறை பார்லிமெண்டின் அங்கீகாரத்திற்கு வந்தபொழுது லப்டினண்டு கர்னல் மூர் இம்மசோதாவை ஆதரித்தும் டி. வாலராவை எதிர்த்தும் பேசினராம். இவருக்குப் பின் டெவ்லின் என்னுமோர் அங்கத்தினர் மசோதாவை எதிர்த்துப் பின்வருமாறு பேசினர்:—

கர்னல் மூர் அவர்கள் தமது வீரத்தனத்தைப்பற்றியும் அயர்லாந்தில் தாமிருந்தபொழுது அவர்பெற்ற அனுபவத்தைப் பற்றியும் பேசிவிட்டார். அவரது சொற்பொழிவில் அவரது வாழ்க்கைச் சரிதையின் ஒரு பாகத்தைக் கேட்டறிந்தோம். டி. வாலரா இவரைப்பிடித்துவைத்துக்கொண்டு கஷ்டப்படுத்தினரென்றும் இவரைக் கொலைசெய்து விடுவதா, மேட்டாரைப் பிடுங்கிக்கொண்டு விட்டுவிடுவதா என்று ஒரு ஆலோசனைச் சபை கூட்டி யோசித்தாரென்றும், பிறகு இன்று இச் சபையில் இம்மசோதாவை ஆதரித்துப் பேச வேண்டுமென்று அவரை விட்டுவிட்டார்என்றும் நண்பரதுபிரசங்கத்திலிருந்து அறிகின்றோம். இன்னபடி மசோதாவிற்குச் சம்பந்தமில்லாமல் வாய்வந்த சொற்களை இவர் வழியவிட்டிருக்கவேண்டா. வட அயர்லாந்து வருஷ நிலவரி கொடுக்காதபோது தென் அயர்லாந்து மாத்திரம் ஏன் கொடுக்கவேண்டும்? நான் டி. வாலராவின் கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்லன், எனினும் இம்மசோதா நியாமான மசோதாவன்று. தென் அயர்லாந்து நிலவருஷவரி தரமறுப்பதால்இவ்வரிபோட்டுவிடலாமென்று நினைப்பதுதவறு. இதனால் தொல்லை யேற்படும்.

***

பெல்லாரியில் பஞ்சநிலை:—பெல்லாரி ஜில்லாவின் பஞ்சநிலை கவலைக்கிடமுள தாயிருக்கின்றது. ஜூன்மாதம் கூடிய சட்டசபையின் கோரிக்கைப்படி நியமனம் பெற்ற வரவுசெலவுக் கமிட்டியின் கூட்டமொன்று சில தினங்களுக்குமுன் கூடிற்று. அக்கமிட்டியார் பெல்லாரி பஞ்ச நிவர்த்திக்காக 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் உதவவேண்டுமென்று தீர்மானித்துள்ளார்கள். ஆகஸ்டுமாத முதலில் கூடும் சட்டசபையின் அங்கீகாரம் பெற்றவுடன் இத்தொகை பஞ்சநிவர்த்திக்கு அளிக்கப்படும் என்று தெரிகின்றது.

ஒட்டவா மஹாநாடு:—உலகத்திலுள்ள எல்லா ஏகாதிபத்திய நாடுகளுக்குள்ளும் சினேக உணர்ச்சியும், வியாபாரப் பெருக்கமும் ஏற்படுவதற்காக, ஒட்டவாவில் ஏகாதிபத்திய மஹாநாட்டின் கூட்டம் ஒன்று நடைபெறுகின்றது. பிரிட்டிஷ் பிரதிநிதிகள் இம்மஹாநாட்டால் நன்மை ஏற்படும் என்று கருதுகின்றார்கள். என்று 20-ந் தேதியிட்டு வந்த லண்டன் செய்தி கூறுகின்றது.

***

அண்ணாமலைச் சர்வகலாசாலைக் கூட்டம்:—சென்ற சனிக்கிழமையன்று சிதம்பரத்தில் ராவ் சாஹிப் S. E. ரங்கநாதன் அவர்கள் தலைமையில், அண்ணாமலைச் சர்வகலாசாலைச் சிண்டிகேட் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் முதன்முதல், அடுத்த சிண்டிகேட் கூட்டத்தை அக்டோபரில் கூட்டுவதென்றும், பட்டமளிப்பு விழா விஷயமாய்க் கவர்னர் அவர்களுடன் கலந்து முடிவுசெய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

1932-ம் வருஷம் இண்டர் மீடியேட் பரீட்சையில் தவறியவர்கள் 1934 வரை பரீட்சைக்குப்போகலாம் என்று அனுமதிக்கப்பட்டது.

சங்கீதக் கல்லூரியில் 1932-ம் வருஷத்தில் தேறியவர்கள் 1933-34 இல் பூர்வாங்கப் பரீட்சைக்கும் 1934-35 இல் சங்கீத பூஷண வித்வத் பட்டப்பரீட்சைக்கும் போகலாம் என்று தீர்மானிக்கப் பட்டது.

ஆங்கிலப் படிப்பு ஆலோசனைச் சபைக்கும் புதிய ஐரோப்பிய பாஷா சபைக்கும் இது வரை ஸ்ரீமான் காதி என்பவர் தலைவராயிருந்தார். இப்பொழுது எ. மெண்டலாய் என்பவரை இக் கூட்டம் நியமித்தது.

தமிழல்லாத திராவிட பாஷா சபைக்கு ஸ்ரீமான்களான ராம பிஷரோடி, S. V. ரங்காச்சார்லு, சோமயாஜலு, வெங்கடராம சாஸ்திரியார் நியமிக்கப் பெற்றனர். வேறு சில தீர்மானங்களும் செய்யப்பெற்றன.

***

பெஷாவர் லேடிரீடிங் ஆஸ்பத்திரியில் தலைவராயிருக்கும் காப்டன் கோல்ட் ஸ்டிரீம் I.M S. ஜூலை மாதம் 22-ந் தோதி வியாதியஸ்தர்களைப் பார்த்து வருகையில் ஒரு முஸ்லிம் வேலைக்காரன் அவரைக் கத்தியால் குத்திவிட்டான். குத்தியவன் ஓடிவிட முயன்றானும் பிடிக்கப்பெற்றுக் கைதுசெய்யப் பட்டான். டாக்டர் இறந்து விட்டார் என்று பெஷாவர்ச் செய்தி கூறுகின்றது.

***

பம்பாய் வைத்தியக் கல்லூரி மாணவர்களில் ஒருவர் வயித்தியசாலையில் சிகிச்சையிலிருக்கையில் ஒரு நர்ஸ் அவரைச் சரியாகக் கவனிக்கவில்லையென்று மாணவர்கள் வயித்தியநிலையத் தலைமை அதிகாரிக்கு எழுதினரென்றும், இது விஷயமாக அவர் விசாரணை நடத்தாததால் மாணவர்கள் வயித்தியக் கல்லூரிக்குப் போகவில்லையென்றும் பம்பாய்ச்செய்தி கூறுகின்றது.


KALANILAYAM
Reg. No. M. 2324.


# — சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நே:—3002

**96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.**

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷேல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும்,பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமான தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும்,தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்ளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினால் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம்.குறித்த காலந் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.



— தேகபலம் —

## :: புத்திர சந்தானம் ::

இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்ரைகளை உபயோகியுங்கள்.

சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.

மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.
5 டப்பிகள் ரூ. 4.

இனும்! காம சாஸ்திரம் இனும்!

கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செலவின்றியும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.



வித்வான் த. சண்முகக் கவிராயரின்

## :: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங்கள் அடங்கியது ரூ. 5 மற்ற பர்வம் அச்சில்

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்



## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

## FIRE & ACCIDENT RISKS

**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)